பக்கங்கள் எட்டு
விலை ரூபா: 5.00

யாழ்ப்பாணம்


# வலம்புரி
VALAMPURI

சங்கு 01 வள்ளுவர் ஆண்டு 2031 மார்கழி 02 ஞாயிற்றுக்கிழமை (17-12-2000) தொ. பேசி 3378 ஒலி: 363


லாலாசோப்
சன்சயின் சோப்
விநியோகஸ்தர்
பாலகணேசன்
களஞ்சியம்
225, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
லாலாசோப் அச்சுவேலி
(கி.1045)

## விடுதலைப் புலிகளுடன் நேரடியாகப் பேசுவதற்கு அரசு தயாராகவுள்ளது!

### புதுடில்லியில் அமைச்சர் கதிர்காமர்பேட்டி

இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பான சமாதானப் பேச்சுவார்த்தை குறித்து அரசின் நிலைப்பாட்டை தெளிவுபடுத்தி அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளோம். இது தொடர்பான பதிலை விடுதலைப் புலிகளிடம் இருந்து அரசு எதிர்பார்த்துள்ளது.

புதுடில்லியில் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் இலங்கையின் வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளதாக ரய்ட்டர் செய்தி ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

அப்பேட்டியில் அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் மேலும் தெரிவிக்கையில் கூறியிருப்பதாவது:-

இனப்பிரச்சினை தொடர்பாகவிடுதலைப்புலிகளுடன் நேரடியாகப் பேசுவதற்கு அரசு தயாராகவுள்ளது. தற்பொழுது நடைபெற்றுக் கொண் → 8ஆம் பக்கம் பார்க்க

## மிதிவெடியில் கால் இழப்பு

[வவுனியா]

பளைப்பகுதியில் நேற்று தேங்காய் பறிக்கச் சென்ற குடும்பஸ்தர் ஒருவர் மிதிவெடியில் சிக்கி தனது காலை இழந்துள்ளார்.

புதுக்குடியிருப்பு இரணைப்பாலையைச் சேர்ந்த ஜெயந்தன் யோசப் அன்ரனி [வயது 31] என்பவரே காலை இழந்தவராவார் இவர் கிளிநொச்சி வைத்திய சாலையில் அனும

[8 ஆம் பக்கம் பார்க்க]

## ★ கினிகிர - 5. 2ஆவது கட்ட இராணுவ நடவடிக்கை

# மும்முனைகளூடாக படை நகர்வு

# 12 இராணுவம் பலி; 32பேர் காயம்!

### 11சதுரகிலோமீற்றர் மீட்டதாக அறிவிப்பு

(நமது நிருபர்)

தென்மராட்சிப் பகுதியில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளைமீட்டு கண்டிவீதியூடான விநியோகப் பாதையைக் கைப்பற்றும் நோக்குடன் நேற்று அதிகாலை ஆரம்பிக்கப்பட்ட 'கினிகிர-5' இரண்டாவதுகட்ட இராணுவ நடவடிக்கையின்போது ஒரு அதிகாரியும் 11 இராணுவத்தினரும் கொல்லப்பட்டதுடன், 32 பேர் காயமடைந்துமுள்ளனர்.

இந்த இராணுவ நடவடிக்கைகளின்போது விடுதலைப்புலிகளின் வசமிருந்த 11 சதுர கிலோமீற்றர் பரப்பை படையினர் கைப்பற்றி பலப்படுத்தி வருவதாக இராணுவ பேச்சாளர் பிரிகேடியர் கருணாரத்தின தெரிவித்தார்.

கினிகிர -5 இன் இரண்டாவது கட்ட இராணுவ நடவடிக்கை மும்முனைகளூடாக இராணுவத்தினரால் நேற்று அதிகாலை 5 30 மணியிலிருந்து மேற்கொள்ளப்பட்டது.

★ சரசாலையில் இருந்து பருத்தித்துறை வழியாக மேற்கொள்ளப்பட்ட இராணுவநடவடிக்கையில்3கிலோமீற்றர் தூரத்தையும்,

★ சாவகச்சேரியில் இருந்து கைதடி நோக்கிய பாதையில் 3 கிலோ மீற்றர் தூரத்தையும்,

★ மட்டுவில் மேற்கு நுணாவில் பகுதியில் 3 கிலோ மீற்றர் தூரத்தையும் கைப்பற்றியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

→8ஆம் பக்கம் பார்க்க

## மண்மீட்புப் போரில் 16,600 போராளிகள் வீரச்சாவைத் தழுவினர்

[மட்டக்களப்பு]

மாவீரர்கள் காலத்தால் அழியாத சிரஞ்சீவிகள்; எமது போராட்ட வரலாற்றில் இதுவரை 16 ஆயிரத்து அறுநூறு போராளிகள் வீரச்சாவை தழுவியுள்ளனர். இன்று சர்வதேசமே எமது போராட்ட வெற்றியை பார்த்து பிரமித்துக்கொண்டிருக்கிறது

இவ்வாறு விடுதலைப் புலிகளின் மட்டு அம்பாறை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் நிஷாம் தெரிவித்துள்ளார்.

கிரிமிச்சை இராணுவ முகாம் தாக்குதலில்உயிர்த்

(8 ஆம்பக்கம் பார்க்க)

## வடமராட்சி மீனவர்கள் நடத்திய பகிஷ்கரிப்பு போராட்டம் வெற்றி

(வடமராட்சிகிழக்கு)

வடமராட்சியில், இன்பருட்டி, சக்கோட்டை மற்றும் சுப்பர் மடத்தைச் சேர்ந்த கடற்றொழிலாளர்கள் பலர் நேற்றுக் காலை தொழிலில் ஈடுபடாது பகிஷ்கரித்தனர்.

வழமையாக இப் பகுதியில் காலை ஆறுமணி முதல் நண்பகல் ஒருமணி வரை கடலில் தொழில் செய்ய இராணுவத்தினர் அனுமதிவழங்கியிருந்தனர். ஆனால்நேற்றைய தினம் காலைஏழு மணிக்கே கடலில் இறங்கி தொழிலில் ஈடுபட வேண்டுமென்று இராணுவத் தரப்பால் தெரிவிக்கப்பட்டதையடுத்தே மேற்படி பகிஷ்கரிப்பு போராட்டம் இடம்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## "கினிகிர 5" - நடவடிக்கை போக்குவரத்து பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கை இராணுவத்தினரால் நேற்று அதிகாலை மேற்கொள்ளப்பட்ட கினிகிர - 5 இன் இரண்டாவது கட்ட இராணுவ நடவடிக்கையின்போது, வடமராட்சிப் பகுதியில் இருந்து தென்மராட்சிப் பகுதிக்கு முள்ளியூடாக பொது மக்கள் எவரும் செல்வதற்கு நேற்று அனுமதிக்கப்

( 8 ஆம் பக்கம் பார்க்க)

## இளைஞர்கள் இருவர்கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பஸ் நிலையப்பகுதியில் வைத்து இரு இளைஞர்கள் மோட்டார் சைக்கிள் இராணுவப் பிரிவினரால் நேற்று நண்பகல் கைதுசெய்யப்பட்டுள்ளார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

இவ்விளைஞர்களினது சைக்கிள்கள் இப்பகுதியிலுள்ள பொலிஸ்காவலரணில் விடப்பட்டுள்ளது. (இ-12)

## பல்குழல் தாக்குதல் மாணவர் குழப்பம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை இராணுவத்தினர் நேற்று அதிகாலை திடீரென ஆரம்பித்த இராணுவ நடவடிக்கையினால் ஜீ.சி.ஈ. பரீட்சைக்குதோற்றிய மாணவர்கள் பெரும் சிரமத்திற்குள்ளானார்களென தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுன்னாகம், மல்லாகம், தெல்லிப்பழை ஆகிய பகுதிக

(8ம் பக்கம் பார்க்க)

## கொழும்பு நகரில் பாதுகாப்பு தீவிரம்

(கொழும்பு)

எதிர் வரும் நத்தார், புதுவருட தினக்கொண்டாட்டங்களை ஒட்டி கொழும்பு நகரினதும் அதன் புறநகர்ப் பகுதிகளிலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுவருவதாகதெரிவிக்கப்பட்டுள்ளது.

பண்டிகைக் காலத்தைமுன்னிட்டு விடுதலைப்புலிகள் தாக்குதல்களை மேற்கொள்

(8ஆம்பக்கம் பார்க்க)

## உதவிவழங்கும் நாடுகளின் கூட்டம் நாளை பரிஸில் நடைபெறுகிறது

### ஜனாதிபதி, அமைச்சர்கள் பங்குபற்றுவர்

(கொழும்பு)

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் நாளை பிரான்ஸ் நாட்டின் தலைநகர் பரிஸில் ஆரம்பமாகின்றது. இக்கூட்டம் நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை வரை நடைபெறும்.

மேற்படி கூட்டத்தில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க உரையாற்றவுள்ளாரென்று அரச வட்டாரங்கள் தெரிவித்துள்ளன,

இக்கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக மூன்று அமைச்சர்கள் உட்பட அரச அதிகாரிகள் குழுவொன்று இன்று பரிஸ் புறப்படுகின்றது.

இக்குழுவில் அமைச்சர்கள் எஸ். பி. திஸநாயக்க, பேராசிரியர் ஜி. எல். பீரிஸ், இந்திக குணவர்த்தனா ஆகியோர் அடங்குகின்றனர்,

மேற்படி உதவிவழங்கும் நாடுகளின் கூட்டத்தில் ஜனாதிபதி தமது உரையில்

(8ம் பக்கம் பார்க்க)

## இலங்கையில் நிலநடுக்கம் இன்று ஏற்படலாம்?

இலங்கையில் இன்றும், நாளையும் நிலநடுக்கம் ஒன்று ஏற்படலாமென புவியியல்துறை பேராசிரியர் லலித் விஜயவர்த்தனா எதிர்வு கூறியுள்ளார்.

'றிச்டர் 5' அளவில் இந்நில நடுக்கம் ஏற்படலாம் என்றும் இது மூன்று விநாடிகளுக்கு நீடிக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்:

இந்நில நடுக்கத்தின் தாக்கம் 300கிலோ மீற்றர் தூரத்திற்கு இருக்கும் என (8 ஆம் பக்கம் பார்க்க)

## சிறு விளம்பரம்

**சிறுவர்க்கான கணனி**

கணனி யூடான கற்பித்தல் முறைமைகள் கனடாவிலிருந்து தருவிக்கப்பட்ட CD மூலம்இலவசமாக 16, 17ஆம் திகதிகளில் மாலை 3.30 மணிக்கு பயிற்றுவிக்கப்படும். பெற்றோரும் அழைக்கப்படுகின்றனர். MCS,324 பலாலி வீதி யாழ்ப்பாணம்.

(கி/1113)

## புதிய பவுஸர் கொள்வனவு

(கல்வயல்)

பருத்தித்துறை நகர சபை குடிநீர் விநியோகத்திற்கென புதிய பவுஸர்ஒன்றைக் கொள்வனவு செய்துள்ளது.

இவ் பவுஸர் மூலம் பருத்தித்துறை நகரசபை எல்லைக்குட்பட்ட தண்ணீர்த் தட்டுப்பாடு நிலவும் இடங்களுக்கு குடி நீர் விநியோகிக்கப்படவுள்ளதாகவும்தெரிவிக்கப்படுகின்றது. (செ-111)

## கலந்துரையாடல்

(அச்சுவேலி)

வலிகாமம் கிழக்கு-இடைக்காடு ஜே/283 கிராமசேவகர் பிரிவுக்கான சமுர்த்தி செயலணி செயற்பாட்டு குழு அமைப்பதுசம்பந்தமான கலந்துரையாடல் எதிர்வரும் 20 ஆம்திகதிபுதன்கிழமை காலை 10.30 மணிக்கு இடைக்காடு ஜலைமகள் சனசமூக நிலையத்தில் நடைபெறுமென மேற்படி பகுதிக்கான சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் செல்வி. ஆ. தங்கேஸ்வரி தெரிவித்துள்ளார். (உ-14)

கரவெட்டி

# ஞானாசாரியார் பாடசாலையில் கட்டடங்கள் பற்றாக்குறை

### நிலைமையை விளக்கி பி. ச.தலைவருக்கு கடிதம்

(மந்திகை)

கரவெட்டி ஞானாசாரியார் கல்லூரியில் நிலவும் இட நெருக்கடி காரணமாக,வகுப்புக்களை நடத்துவதில் எழுந்துள்ள சிக்கல்கள் குறித்தும், புதிய கட்டடங்கள் அமைக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்தும் கரவெட்டி பிரதேசசபைத் தலைவர் வல்லிபுரம் நடராசாவிற்கு கடித மூலம் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

கல்லூரியின் பழைய மாணவர்களால் அனுப்பிவைக்கப்பட்டுள்ள அக்கடிதத்தில்,

இக் கல்லூரியில் 810 மாணவர்களும், இடம் பெயர்ந்த 150 மாணவர்களுமாக கிட்டத்தட்ட 1000 மாணவர்கள் இங்கு கல்விகற்கின்றனர்.

அத்துடன்,இடம்பெயர்ந்த மூன்று பாடசாலைகள் இங்கு மாலை நேரத்தில் இயங்குகின்றன.

இதனால் ஏற்பட்டுள்ள இட நெருக்கடியால் மாணவர்கள் மர நிழல்களிலும், பழுதான கொட்டில்களிலும் கல்வி கற்க வேண்டியதாய் உள்ளது.

அத்துடன், மாணவர் தொகைக்கேற்ப கட்டட வசதிகளை அதிகரிக்க முடியாத பொருளாதார நிலை பாடசாலையில் நிலவுவது குறித்தும் இக் கடிதத்தில் விளக்கப்பட்டுள்ளது.

(உ-23)

# இடம்மாற்றம் பெறுவோர் பட்டியல்;யாழ்ப்பாணத்தில்

(யாழ்ப்பாணம்)

உள்ளூராட்சிதிணைக்களத்தைச் சேர்ந்த வடக்கு-கிழக்கில் கடமையாற்றும் எழுதுநர்கள் தரம் 1, 2 அதிவிசேடம்,மற்றும் கணக்கு பதியுநர், நூலகர் தொழில் நுட்ப உதவியாளர்கள் ஆகியோரின் இடமாற்றப் பட்டியல் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட எழுதுவினைஞர் சங்கத் தலைவர் செ. செல்வரத்தினம் தெரிவித்துள்ளார்.

மேற்படி இடமாற்றப்பட்டியல் நல்லூர் கோவில் வீதியில் உள்ள உள்ளூராட்சி ஆணையாளர் திணைக்களத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (க)

# லூர்துமாதா ஆலயத்தில் தங்கியுள்ள மக்களுக்கு விரைவில் உறைவிடம்

### பரு. பிரதேச சபை ஏற்பாடு

(மந்திகை)

பருத்தித்துறை லூர்து மாதா ஆலயத்தில் தங்கியிருக்கும் குடும்பங்களிற்கு விரைவில்வீடுஅமைத்துத்தரப்படும் என ஈ. பி. டி. பி. யின் பருத்தித்துறை பிரதேச சபைத் தலைவர் பரஞ்சோதி ரவீந்திரன் உறுதியளித்துள்ளார்.

இடம் பெயர்ந்து இவ் ஆலயத்தில்தங்கியிருக்கும் குடும்பங்கள் அங்கு தாம் அன்றாடம்அனுபவித்துவரும்அசௌகரியங்கள் குறித்து விளக்கப்பட்டதன் பேரிலேயே இவ் உறுதிப்பாடு வழங்கப்பட்டுள்ளதாய் தெரிய வந்துள்ளது.

கெயர் நிறுவனத்தினூடாக வீடுகளை அமைத்துத்தர நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [உ-23]

## நெசவாளர் பாதிப்பு

தென்மராட்சி பச்சிலைப் பள்ளிப் பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்துள்ள கைத்தறி நெசவில் ஈடுபட்ட ஆயிரக்கணக்கான வறிய குடும்பங்கள் தொழில் இழப்புக் காரணமாக கஷ்டநிலைக்கு உள்ளாகியுள்ளனர்.

இடப் பெயர்வுகாரணமாக நெசவுத் தொழிலிற் குரியஉபகரணங்களை மீட்டுவர முடியாமையினாலேயே இவ்வாறு கஸ்ர நிலைக்குள்ளாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (செ-111)

## தன்மானத்துடன்...

கப்பட்ட தொழு நோயாளர்களுக்கான ஒரு பராமரிப்பு மையத்தை நிறுவி தொழு நோயாளர்களைப் பராமரிப்பதே அவரது இறைபணியின் நோக்கமாயிருந்தது. இந்திய சுதந்திரத்தின்தந்தை மகாத்மாகாந்தி சுட்டுக் கொல்லப்பட்டதை உலகம் சரியென்று ஏற்றுக் கொள்ளுமானால், கறுப்பின மக்களின் அடிமைத்தனத்துக்கு எதிராக குரல் கொடுத்த அமெரிக்க ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கன் சுட்டுக் கொல்லப்பட்டது சரியென உலகம் அங்கீகரிக்குமானால் மாபெரும் அருட்பணிக்க மதபோதகரும் இருமகன்மரும் தங்கள் ஜீவனைக் கொடுத்ததையும் சரி என்றே ஏற்றுக்கொள்ள முடியும்.

அடுத்து ஒரு மனிதனுக்கு உண்ண, உடுக்க, வசிக்க, பேச தனிப்பட்ட சுதந்திரம் இருக்கிறது போலவே மதச் சுதந்திரமும் கொடுக்கப்பட்டுள்ளது. எந்த இடத்திலும், எந்தநிலையிலும்,எந்தநேரத்திலும் இச் சுயாதீனத்திற்குத் தடை இல்லாதபடி ஸ்ரீலங்கா பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு சட்டம் உள்ளது. இதையும் நாம்கருத்தில்கொள்ளவேண்டும் இறுதியாகப் பாண்டவர்களுக்கும், கௌரவர்களுக்கும் யுத்தம் நடந்த யுத்தபூமியாக இருந்த குருஷேத்திரத்திலே அதர்மம் தோற்றது. சத்தியம் வென்றது. இதுவரலாறு. ஆனால் வலம்புரியின் ''குருஷேத்திரத்தில்'' தொடர்ந்தும்சொற்போரோ, மற்போரோ, விற்போரோ செய்வது எமது நோக்கமல்ல. எங்கள் நிலையை, நோக்கத்தைத் தெளிவுபடுத்த இவ் விபரங்கள்போதுமானவை என்று கருதுகின்றேன். 1950களில் இனவாதத்திற்குதூபமிட்ட தென்னிலங்கைப் பத்திரிகைகளின் கைங்கரியத்தினால் இன்று தேசம் பல்லாயிரக்கணக்கான உயிர்களைக்காவு கொடுத்துபல்லாயிரக்கணக்கான கோடி பெறுமதியான சொத்துக்களை இழந்துதேசம்தள்ளாடுகிறது. இந்நிலையில் குறிப்பாக குடாநாட்டின் மதவாத தூபமிட்டுசுயலாபம் தேடநினைக்கும்சக்திகளை வலம்புரிஇனங்கண்டு கொள்ள வேண்டும். குடாநாட்டு மக்களின் அவல நிலையின் மத்தியிலும் பகையுணர்வை உண்டுபண்ணும் பச்சோந்திகளை வலம்புரி தூக்கியெறிய வேண்டும்.

## சிறுவர்களின் அரங்க நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

சிறுவர் பாதுகாப்பு நிதியம் மற்றும் யாழ். திருமறைக் கலாமன்றம் ஆகியவை இணைந்து, நாடகம் சார் பயிற்சிகளினை வழங்கிய சிறுவர்கழக அங்கத்தவர்களைக் கொண்டு நாடகநிகழ்வுகளை பல்வேறு இடங்களிலும் மேடையேற்றி வருகின்றனர்

இந்த வகையில், இம்மாதம் 13 ஆம் 14 ஆம் 15 ஆம் திகதிகளில் முறையே, ஆனைக்கோட்டை சாவற்காட்டுப் பகுதியிலும் சண்டிலிப்பாய் கோட்டைக்காட்டுப் பகுதியிலும் சுன்னாகம் குருவளப் பகுதியிலும் முற்றிலும் சிறுவர்கள் பங்கேற்கும் தனிநடனம்,கோலாட்டம், அபிநயக் குறுநாடகம் என்பன இடம் பெற்றன.

சிறுவர்களின் இவ் நிகழ்வுகளுக்கு பொது மக்களிடத்து பெருவரவேற்பு கிடைத்திருப்பது குறிப்பிடத்தக்கது.(உ)

இலவச

## மருத்துவ முகாம்

(தென்மராட்சி)

யாழ். லயன்ஸ் கழகமும், தீவக லயன்ஸ் கழகமும் இணைந்துஆனைக்கோட்டை சாவற்காட்டு மகாத்மா சனசமூகநிலையத்தில் இலவச மருத்துவ முகாம் ஒன்றை இன்று காலை 9 மணிக்கு நடத்தவுள்ளனர் (க-77)


## இன்று தூய அன்னை ஸ்ரீசாரதாதேவியின் ஜன்மதினம்

### தூயஅன்னை ஸ்ரீசாரதாதேவியின் சமய கலாசார மண்டபம்




## கட்டட வேலை பூர்த்தியாக ரூபா 25 இலட்சம் நிதி சேகரித்தல்

31.12.1969 இல் ஆரம்பிக்கப்பட்ட அன்னையின் நாமம் தாங்கிய சேவாச்சிரமம் இதுவரைக்கும் மக்கள் துயர் துடைக்கும் பணிக்காக 40 இலட்சத்திற்கும் மேல் உதவிகளை வழங்கியுள்ளது.

''இவ் ஆத்மீக பணிக்கு உதவுக
அன்னையின் திருநாமம் வாழ்க''

செயலாளர்
ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா
சேவாச்சிரமம்,
பருத்தித்துறை.

(கி-1117)

## நியூ சிற்றி றேடேர்ஸ்

## New City Traders

ரீவி, வீடியோ, டெக், ரேடியோ, கசற்ரெக்கோடர் அன்ரனா, பூஸ்ரர், வயர், சிற்றிசன், சீக்கோ கசியோ, சுவர், கை மணிக்கூடுகள், ரேடியோ,ரீவி உதிரிப்பாகங்கள் (I) ஸ்ரபிளேசர்கள், பற்றி சார்ஜர்கள், ரைஸ்குக்கர், சீலிங், மேசை விசிறிகள், கிறைன்டர்கள், வீடியோ, ஓடியோக் கசற்கள் கல்குலேட்டர்கள் மின்சார உபஉறுப்புக்களை உத்தரவாதத்துடன் நிதான விலையில் பெற்றுக்கொள்ள.

நியூ சிற்றி ரேடர்ஸ்,
135, கஸ்தூரியார் வீதி,
(குளத்துக்கு முன்பாக)
யாழ்ப்பாணம்.

சிறந்த முறையில்
அன்ரனா பொருத்திக் கொடுக்கப்படும்
T.P - 3226

(2020)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

யாழ்.மாவட்டத்தில்

# வைத்திய நிபுணர்கள் பற்றாக்குறை

## மேலதிக கடமை புரிய வேண்டிய அவசியம்

## வைத்தியர் சங்கம் ஆதங்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் வைத்திய அதிகாரிகளுக்கும், வைத்திய நிபுணர்களுக்குமான வெற்றிடங்கள் அதிகளவில் தொடர்கின்றது. ஆனால் அண்மைக்காலங்களில் சுகாதார அமைச்சினால் வெளியிடப்பட்ட இலங்கை பூராவிற்குமான வெற்றிடங்களுக்கான பட்டியலில் யாழ்ப்பாணத்தில் உள்ளவெற்றிடங்கள் முழுமையாக மறைக்கப்பட்டுள்ளது.

அரசமருத்துவர்களின்யாழ். பிராந்தியத்தினர் வெளியிட்ட அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளனர்.

மேற்படி அமைப்பின் தலைவர் டாக்டர் சிவகுமார் செயலர் ஆர். அருட்செல்வன் ஆகியோர் ஒப்பமிட்டு வெளியிட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

தொடர்ந்து கொண்டிருக்கும் போரின் காரணமாக யாழ். மாவட்ட சுகாதார வைத்திய சேவை கடும்நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ளது. போரின் காரணமாக 1990ம் ஆண்டிலிருந்து ஆரம்பித்த வைத்திய அதிகாரிகளினதும் வைத்திய நிபுணர்களினதும் வெளியேற்றம் 96 இன் பின் பெருமளவு அதிகரித்ததால் குடாநாட்டின் வைத்திய ஆளணியில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

இன்று யாழ். மாவட்டத்திற்கான அங்கீகரிக்கப்பட்ட வைத்தியர்களுக்கான ஆளணியினரில் 40 வீதமானவர்களே சேவையில் உள்ளனர். இதேவேளை, பெருமளவில் அதிகரித்துவரும் நோயாளர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப அங்கீகரிக்கப்பட்ட ஆளணி நாட்டின் ஏனைய பகுதிகள் போலன்றி இங்கு அதிகரிக்கப்படவில்லை.

இப்படியானபுறக்கணிப்பை எடுத்துக்காட்டி உரிய நடவடிக்கை எடுக்குமாறு எமது சங்கம் அனுப்பிய கோரிக்கையின் பின் வெளியிடப்பட்ட வைத்திய அதிகாரிகளுக்கான பட்டியலில் யாழ்ப்பாணம் முழுமைக்குமாக எட்டு வெற்றிடங்கள் மட்டுமே சாட்டப்பட்டுள்ளது கவலைக்குரிய ஒரு செயலாக அமைந்துள்ளது.

ஏற்கனவே கடந்த பத்து வருடங்களாக முன்னேற்றம் ஏதுமின்றி தொடரும் மருந்துகள மற்றும் உபகரணங்களுக்கான கடுமையான தட்டுப்பாட்டினால் ஏற்படும் நெருக்கடிகளுடன் தம் கடமையை ஆற்றிவரும் வைத்திய அதிகாரிகளுக்கும் வைத்திய நிபுணர்களுக்கும் அதிகரித்து வரும் ஆளணிப் பற்றாக்குறை பெரும் சுமையையும் விரக்தியையும் ஏற்படுத்துவதாக உள்ளது.

ஆளணிப் பற்றாக்குறையால் நாளாந்தம் அதிகளவு வேலையை செய்யவேண்டியுள்ளதுடன் மேலதிக நேரம் வேலையாற்றுவதும் கட்டாயமாக உள்ளது. தமது அவசிய தேவைகளுக்காகதமக்கு அனுமதிக்கப்பட்ட விடுப்புகளைக் கூட பயன்படுத்த முடியாதுள்ளதுடன் ஓய்வு நாட்களிலும் கூட தொடர்ந்து பணியாற்ற வேண்டியுள்ளது.

இந்நிலையில் வட-கிழக்கு மாகாணத்தில் கடமையாற்றும் தென்னிலங்கையை சேர்ந்த வைத்திய அதிகாரிகளுக்கு மட்டும் பல மேலதிக கொடுப்பனவுகளையும் சலுகைகளையும் வழங்க அமைச்சரவை முடிவெடுத்து செயலாற்றி வருகிறது.

ஆனால் வட-கிழக்கில் ஏலவே பலசிரமங்களுக்கு மத்தியில் கடமையாற்றும் வடக்கு-கிழக்கை சேர்ந்த வைத்திய அதிகாரிகளுக்கும் நிபுணர்களுக்கும் மேற்கூறிய கொடுப்பனவுகளை மறுத்து அரசு தனது மாற்றாந்தாய் மனப்பான்மையை வெளிக்காட்டியுள்ளது. இது இங்குள்ள வைத்தியர்கள் மத்தியில் பலத்த ஏமாற்றத்தையும் வேதனையையும் ஏற்படுத்தியுள்ளது.

அரசின் இத்தகைய பாரபட்சமான நடவடிக்கைகள் இங்கு தொடர்ந்து கடமையாற்றும் வைத்தியர்களையும் ஏனையவர்களைப் போல வெளியேற உந்தும் என்பதை சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது.

அரசு வடக்கு-கிழக்கில் குறிப்பாக யாழ். குடாநாட்டில் சுகாதார வைத்திய சேவையில் காட்டிவரும் பாரபட்சங்களை நீக்குவதுடன் தான் அறிவித்துள்ள மேலதிக கொடுப்பனவுகள் சலுகைகளை வழங்குவதாயின் வடகிழக்கில் பணியாற்றும் சகல வைத்தியர்களுக்குமாகவழங்க வேண்டும் என்பதே எமது கோரிக்கையாகும்.

இந்நிலையில் யாழ். குடாநாட்டின் சுகாதார வைத்திய சேவையில் உள்ள குறைபாடுகளையும் ஆளணித்தட்டுப்பாட்டையும் நீக்கவும் மேலதிக கொடுப்பனவுகள் பற்றிய எமது கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கும் தாங்களும் ஆவன செய்யவேண்டுமென வேண்டுகின்றோம்.

இவ்வாறு அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(க)

## வினைத்திறன் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

மாகாண பொதுச்சேவையின் எழுதுநர் சேவை மற்றும் அங்கீகரிக்கப்பட்டுள்ள பிற சேவைகளான பண்டகசாலை காப்பாளர் சேவை, சிறாப்பர் சேவை, கணக்குப் பதியுநர் சேவை, தட்டெழுத்தாளர் சேவை என்பவற்றுக்கான வகுப்பு 2 பிரிவு அ' விலுள்ள உத்தியோகத்தர்கள், சுருக்கெழுத்தாளர் சேவையின் தரம் 2 இல் உள்ள உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை அடுத்த ஆண்டு பெப்ரவரி மாதம் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் நடத்தப்படவுள்ளது

விண்ணப்பதாரிகள் விண்ணப்பப்படிவங்களை இருபிரதிகளில் தயாரித்து தத்தமது திணைக்களத் தலைவருடாக வடக்கு- கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கு அனுப்பிவைக்குமாறு ஆணைக்குழுவின் செயலாளர் கேட்டுள்ளார்.

மாதிரி விண்ணப்பப்படிவத்தினை வடக்கு-கிழக்கு மாகாண பிராந்திய ஆணையாளர் (யாழ்ப்பாணம்) அலுவலகத்தில் பார்வையிட முடியும்.

(உ)

## இராசி பலன்

17-12-2000

(மார்கழி 2, ஞாயிறு)
சப்தமி பி.இ 12 30 வரை
பூரம் பி இ 1.28 வரை
ராகுகாலம் 4.53- 6 23
சுபநேரம் 9 23- 10 53
சித்தாமிர்தம்.

**மேடம்**
மனக்கிலேசம், காரிய தடங்கல். வியாதி, நிலை மாற்றம்.

**இடபம்**
பயந்த சுபாவம், தாய் வழி உறவு, சென்ற இடத்தில் செல்வாக்கு, உஷ்ணவியாதி.

**மிதுனம்**
முயற்சி வெற்றி, தன வரவு, சகோதரர் உதவி, பிரயாணம்.

**கடகம்**
வாக்கு சலகம், காரிய தாமதம் மதிப்புக் குறைவு, பொருள் விரயம்

**சிங்கம்**
கற்பனை மிகுதி, புதிய பொருள் சேர்க்கை, சயன சுகம், உடல் நலம்.

**கன்னி**
பிரயாணம், கர்வப்படுதல், சயனசுகக் குறைவு, பணச் செலவு.

**துலாம்**
தனலாபம், குடும்ப சுகம், சந்தோச மிகுதி, நண்பர்கள் சந்திப்பு.

**விருச்சிகம்**
அதிகாரம், பணியாளர் உதவி, தொழில் மேன்மை, மன அமைதிக் குறைவு.

**தனுசு**
பிரயாணம், உடல் உழைப்பு, அச்ச நிலை, கட்டுப்பாடு.

**மகரம்**
உறவினர் மனக்கசப்பு, பிரயாண பயம், எதிர்பாராத அச்சம், வியாதி

**கும்பம்**
போசன சுகம், உல்லாசம், சுவாரஸ்யம், தனவரவு, காரிய சித்தி.

**மீனம்**
முயற்சி விருத்தி, சுக வாழ்வு, சந்தோசம், முயற்சி பலிதம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.)

வளவன்

## கிறிஸ்மஸ் ஒளிவிழா

(யாழ்ப்பாணம்)

பாதுகாவலன் பத்திரிகை நடத்தும் கிறிஸ்மஸ்ஒளி விழா யாழ். மறைக்கல்வி நிலையத்தில் இன்று காலை 9. 30 மணிக்கு இடம் பெறவுள்ளது.

இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக இளவாலை மறைக் கோட்ட முதல்வர் அருட் திரு கலாநிதி யஸ்ரின் ஞானப்பிரகாசம் கலந்து கொள்கிறார்.

(உ)

★ ★

(மல்லாகம்)

யாழ்ப்பாண விவசாய கல்லூரியில் அண்மையில் ஒளி விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது.

கல்லூரி அதிபர் த. குகதாஸன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் பிரதம விருந்தினராக பேராயர் அதிவணக்கத்திற்குரிய கலாநிதி ஜெபநேசன் கலந்து கொண்டார்.

(க-14)

## மழலைகள் கல்விபூங்கா ஆண்டுவிழா

(தென்மராட்சி)

சமரபாகு அறவழி மழலைகள் கல்விப் பூங்காவின் 16 வது ஆண்டுவிழா இன்று 17ஆம் திகதி கொற்றாவத்தை அமெரிக்க மிஷன் தமிழ் கலவன் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

கா. செல்வச்சோதி தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் கரவெட்டி பிரதேச செயலர் செ. ஸ்ரீனிவாசன் பிரதம விருந்தினராக கலந்து கொள்வார்.

அறவழிப் போராட்டக்குழுவின் தலைவர் வி. ஜீ. தங்கவேல், சர்வோதய செயல் திட்ட அதிகாரி எஸ். வீ. சங்கரப்பிள்ளை வடமராட்சி உதவிக் கல்விப்பணிப்பாளர் துரை. சத்தியசீலன் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகப் பங்குகொள்ளவுள்ளனர்.

(க-77)

# பேரினவாதிகளை திருப்திப்படுத்தும் சமாதான பேச்சை ஏற்க முடியாது

### அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் எம்.பி காட்டமாக தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் பேரினவாதக் கட்சியான சிஹல உறுமயவையும் மற்றும் பௌத்த பிக்குகளையும், இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளையும் திருப்திப்படுத்தும் வகையில் சமாதானப் பேச்சிற்கு தயார் என்று வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் கூறிவருவாரானால் அது நிச்சயமாக வரவேற்க முடியாத ஒன்றே

அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியின் யாழ். மாவட்ட எம்பியான அ. விநாயகமூர்த்தி மேற்கண்டவாறு காட்டமாக தெரிவித்தார்.

அமைச்சரின் சமாதானப் பேச்சுக் குறித்த அறிக்கை தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்; அமைச்சர் கதிர்காமர் இதய சுத்தியுடன் விடுதலைப் புலிகளுடன் பேச்சு வார்த்தைக்கு அரசாங்கம் தயாரென கூறுவாரானால் நிச்சயம் அது வரவேற்கப்படவேண்டிய ஒரு விடயமே.

சமாதானம் குறித்த விடயத்தில் ஜனாதிபதி ஒரு விதமாகவும், பிரதமர் ரட்ண சிறிவிக்கிரமநாயக்க வேறு ஒரு விதமாகவும் கூறிவருவது சமாதானம் பற்றிய இவர்களின் போக்கு குறித்து பலத்த சந்தேகத்தையே தோற்றுவிக்கிறது

பொது ஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தினால் ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்டு தோல்வியில் முடிவடைந்து அரசியல் தீர்வுப் பொதியை திருத்தங்களுடன் சமர்ப்பிக்கப் போவதாக இவர்கள் கூறி வருவதாவது தமிழ் மக்களால் நிச்சயமாக ஏற்றுக் கொள்ள முடியாத ஒன்றே என்றார்.

(க-வ)

# வடக்கு-கிழக்கு அபிவிருத்திக்கு 30மில்லியன் அமெ.டொலர் நிதியுதவி

### வதிவிடப் பிரதிநிதி தெரிவிப்பு

(கொழும்பு)

யுத்தம் நடைபெறும் வடக்கு- கிழக்குப் பகுதியின் எல்லைப் புறக்கிராமங்களின் அபிவிருத்திக்கென உலக வங்கி 30 மில்லியன் அமெரிக்க டொலரை வழங்க முடிவு செய்திருப்பதாக அவ்வங்கியின் வதிவிடப் பிரதிநிதி திருமதி மாரியனா கொலடோரா தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஒபரோய் ஹோட்டலில் இடம் பெற்ற ஊடகத்துறையினருக்கான பயிற்சி பட்டறையில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

இது விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்; உதவி வழங்கும் நாடுகளிலிருந்து இலங்கைக்கு எத்தகைய உதவிகள் வழங்கப்படும் என 18. 19ம் திகதிகளில் பாரிஸில் இடம்பெறும் மாநாட்டில் தீர்மானிக்கப்படும்.

வறுமை ஒழிப்பு, நிவாரணம், வழங்கல், நல்லிணக்கம், புனர்வாழ்வுஆகிய விடயங்களிற்கு முக்கியத்துவம் வழங்கப்படவுள்ளதாக பரவலாக கருத்து தெரிக்கப்பட்டுள்ளது.

இதேவேளையில், உலக வங்கி வழங்கும் உதவிகள் இலங்கையின் அபிவிருத்திக்கே பயன்படுத்த வேண்டும் என்றும் யுத்தத்திற்காக இப்பணம் செலவிடக்கூடாது என்று இலங்கை அரசாங்கத்திற்கு வலியுறுத்திக் கூறப்பட்டதாகவும் மேலும் அறியப்படுகிறது.

(க-வ)

## ஜீவாகாரம் வழங்கல்

ஊர்காவற்றுறை மாவட்ட வைத்திய சாலையில், மாதாந்தம் சிகிச்சைபெறும் கர்ப்பிணித்தாய் மாருக்கும், நிறை குறைந்த குழந்தைகளுக்கும் ஜீவாகாரம் வழங்கப்பட்டு வருகிறது.

இவ் ஜீவாகாரம் வழங்கும் நடவடிக்கை கடந்த நவம்பர் மாதம் முதல் வழங்கப்பட்டு வருவதாகவும் இதனை தொடர்ந்து வழங்கும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதாகவும் ஊர்காவற்றுறை பிரரேதேசசபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

(உ-75)

# சமாதானம் நிலவ வேண்டி மாபெரும் விநாயகர் பவனி

(சங்கானை)

நாட்டில் அமைதியும் சமாதானமும் நிலவ வேண்டி, கடந்த புதன்கிழமை சித்தன் கேணியில், மாபெரும் விநாயகர்பவனி இடம்பெற்றது.

வலி.மேற்கு பிரதேச சபையின் ஆதரவுடன் சித்தன் கேணி இளைஞர்கள் மற்றும் பொதுமக்களின் முயற்சியால் மிகப் பிரமாண்டமாக அமைக்கப்பட்ட விநாயகர் உருவம் சித்தன்கேணி மகா கணபதிப்பிள்ளையார் ஆலய முன்றலில் இருந்து விசேட பூஜை வழிபாடுகளுடன் ஊர்வலமாக எடுத்துச்செல்லப் பட்டது.

பிற்பகல் 3.30 மணியளவில் ஆரம்பித்த இப்பவனி, பெருமளவு பக்தர்கள் புடை சூழ வழக்கம்பரை முத்துமாரி அம்மன் ஆலயத்தை பி.ப. 4.30 மணியளவில் அடைந்தது.

வழி நெடுகிலும் பூரண கும்பங்கள் வைத்து பொது மக்களும், வர்த்தகர்களும் இவ் ஊர்வலத்துக்கு தமது ஆதரவைத் தெரிவித்தனர்.

இவ் ஊர்வலம் இரவு 8.30 மணியளவில் சிவசிதம்பரேஸ்வரர் ஆலயத்தைச் சென்றடைந்தது. (உ-ப-18)

# நாவாந்துறை இறங்குதுறை திறந்து வைக்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யு. என். எச். சி. ஆர். நிறுவனத்தினால் 5 இலட்ச ரூபா நிதியுதவியுடன் அமைக்கப்பட்ட நாவாந்துறைஇறங்குதுறை, நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட யு. என். எச். சி. ஆர். அதிகாரி புஷ், இறங்குதுறை தூணை திரைநீக்கம் செய்ய, யாழ். பிரதேச செயலர் செந்தில் நந்தனன் இறங்குதுறையை நாடா வெட்டி திறந்துவைத்தார்.

இந்நிகழ்வில், நாவாந்துறை பங்குத்தந்தை வண. பிதா பீற்றர் அடிகளார், கடற்றொழில் வள திணைக்கள அதிகாரி யேசுதாசன், கிராம சேவையாளர்கள் தொழில்நுட்பவியலாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (உ-12)

# நிவாரணத்திற்கு லக்டோஜன் விநியோகம் திண்டாடும் நுகர்வோர்

(தென்மராட்சி)

நிவாரணப் பொருட்கள் விநியோகத்தில் குழந்தை இல்லாத குடும்பங்களுக்கு வழங்கப்படும் லக்டோஜன் பால்மா பைக்கற்றுக்களை நிவாரணம் பெற்றவர்கள் அவற்றினை தலா முப்பது ரூபா வீதம் தனியார் கடைகளுக்கு விற்பனை செய்துள்ளனர் எனத் தெரியவந்துள்ளது.

லக்டோஜன் பால்மாவை குழந்தைப்பிள்ளைகள் உள்ள குடும்பங்களுக்கு மட்டும் விநியோகம் செய்யப்படுமாயின் இம் முறை கேடு இடம் பெற மாட்டாது என நிவாரணம் பெறுவோர் தரப்பில் கூறப்பட்டுள்ளது. (க-77)

## கல்வி மேம்பாட்டுக்கு நிதியுதவி

[ஊர்காவற்றுறை]

ஊர்காவற்றுறை தம்பாட்டி கிராமத்தின் மாணவர்களின் கல்வி மேம்பாட்டைக் கருத்திற் கொண்டு, தற்போது பிரான்ஸ்ஸில், வாழும் தம்பாட்டியைச் சேர்ந்த பொதுமக்கள் பெரும் நிதியுதவி செய்து வருகின்றனர்.

தம்பாட்டி கல்வி முன்னேற்றச் சங்கத்தின் ஊடாக மேற்படி நிதி, க. பொ.த. [உ/த] கற்கும் மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

இந்த வகையில்,

க. பொ. த. [உ/த] கற்கும் மாணவர்களுக்கு மாதாந்தம் 530 ரூபாவும், க. பொ. த. (சா/த) கற்கும் மாணவர்களுக்கு கல்வி கற்பதற்கான வசதிகளும் வழங்கப்பட்டு வருவதாக தம்பாட்டி கிராம கல்விமுன்னேற்றச் சங்கத்தின் செயலாளர் சி. சிவச்செல்வன் தெரிவித்துள்ளார்.

மேற்படி நிதியுதவி மாணவர்கள் பாடசாலைக் கல்வி கற்று முடிக்கும் வரை வழங்கப்பட இருப்பது குறிப்பிடத்தக்கது. (உ)

## மார்கழிமாத கொடுப்பனவு

(மானிப்பாய்)

வலி. தென் மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் பொதுசன மாதாந்த உதவிப்பணம்பெறுபவர்களினதும் மற்றும் தொழுநோய் காசநோய், புற்றுநோய் என்பவற்றுக்கான உதவிப்பணம் பெறுபவர்களினதும் மார்கழி மாதத்திற்குரிய கொடுப்பனவுகள் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தினால் அந்தந்த தபாலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

உரியவர்கள் தத்தமது தபாலகங்களுக்குச் சென்று இக் கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (க-120)

# சனிபகவான் வக்கிரம் அடைவது சாதகபலன்களை ஏற்படுத்துமா?

(சென்ற ஞாயிறுதொடர்ச்சி)

### தனுசு (மூலம், பூராடம், உத்தராடம் 1 ம் பாதம்)

14-10-2000 முதல் 5 ல் நீசசனி, நஞ்சுச் சனி தோஷம் 6 மாதம் வரை நடைபெறும். கண்டக ராகு, கேது தோஷம் ஆரம்பமாகிறது. 14.10.2000 முதல் 11.4.2001 வரை சனி வக்கிர காலம் நன்மையில்லை சனி, ராகு கேதுகளுக்கு இக் காலங்களில் பிரீதி செய்தல் நன்று. குருபகவான் 6 ஆம்வீட்டில் சஞ்சாரம் செய்கிறார். 6 ஆம் வீட்டில் சஞ்சாரம் செய்யவிருக்கும் குருபகவான் தனது 5 ஆம் பார்வையாக 10 வீட்டையும் 7 ஆம் பார்வையாக 12 ஆம் வீட்டையும் 9 ஆம் பார்வையாக 2ம் வீட்டையும் பார்வைசெய்கிறார். எனவே இக்குரு பெயர்ச்சி புத்திரர்களால் கணவன் மனைவிக்குள் சண்டை சச்சரவுகள் உண்டாகும். கொடுக்கல் வாங்கல்களில் சிறிது சஞ்சலங்களும்உண்டாகும். மனக் கசப்புகளையும் ஏற்படுத்தும். எதிர்பாராததனவரவுகளைக் கொடுக்கும். உங்களுக்கு மறைமுக எதிரிகளின் தொல்லைகளும் ஸ்திர, சொத்துக்களின் இழப்பும் ஏற்படலாம். சனி, குரு வக்கிரகாலங்களில் அவதானம் தேவை.

## சோதிட பலன்

## த.சத்தியதாஸன்

### மகரம் (உத்தராடம் 2,3 4ம் பாதங்கள் திருவோணம், அவிட்டம் 1 ம், 2 ம் பாதங்கள்)

உங்களுக்கு 14-10-2000 முதல் 11-04-2001 வரை சனியின் 6 மாத வக்கிரத்தால் கண்டகத் தோஷம் உண்டாகும். குரு, சனி வக்கிரகாலங்களில் நன்மையில்லை. தற்போது குரு பகவான் 5 ம் வீட்டில் சஞ்சாரம் செய்கிறார்.

அதுபோல சனி பகவானும் 4ம்வீட்டில் சஞ்சாரம் செய்வதால் சனி கண்டக தோஷமாகிறது. இந்தக் குரு பெயர்ச்சி உங்களுக்கு எல்லா விதத்திலும் ஏற்றத்தினையும் உயர்வையும் உண்டாக்கும். 5 ல் சஞ்சரிக்கும் குருபகவான் 5 ம் பார்வையாக 9 ம் வீட்டையும், 7 ம் பார்வையாக் 11 ம் வீட்டையும் 9 ம் பார்வையாக 1ம் வீட்டையும் பார்வை செய்வதால் உங்களுக்கு இரதக்குருபெயர்ச்சி. எடுத்த காரியத்தில் வெற்றியையும் உண்டாக்கும், ராகு கேது யோக சஞ்சாரம் நன்மையாகும். புகழ், பெருமை, செல்வம், செல்வாக்கு எல்லாவற்றிலும் ஏற்றம் காணப்படும். நண்பர்கள், சாதகமாகவும் இருப்பார்கள். ஆரோக்கியம் மிகவும் நன்றாகும். பொருளாதார ரீதி மேலோங்கும். குடும்பத்தில் அத்தியாவசியமான தேவைகள் பூர்த்தி செய்யப்படும். தடைப்பட்ட சுபகாரியம் தற்போது கோலாகலமாகநடைபெறும். மணமானவர்களுக்கு மக்கட் பேறும் உண்டாகும். கணவன் மனைவி உறவு அற்புதம். கொடுத்த பணத்தை வட்டியுடன் பெறுவீர்கள். நண்பர்களால் நல்ல பலனும் ஆதாயமும் உண்டாகியபடி இருக்கும்.

சோதனைகளைக் கொடுத்தாலும் 6ஆம் வீட்டில் சஞ்சாரம் செய்யும் குருபகவானால் சோதனைகள் குறைந்து சொகுசானநற்பயன்களையும் தரும். ஏற்றமும் உயர்வும் உண்டாக்கிக் கொடுத்திடக் கூடிய உன்னதமான காலம் ஆகும். தேகநிலை சுமாராகத்தான் இருக்கும். நிறையப் பொருள் வரவு இருந்தாலும் அவையாவும் செலவாகிய நிலையிலேயே காணப்படும். குடும்ப வாழ்வில்நிம்மதியிருக்காது.

**வியாபாரிகளுக்கு :**

வங்கிகளில் கடன் வசதியுண்டு. சேமிப்பு, வங்கியிருப்புகளுண்டு. கொடுக்கல் வாங்கல் சுலபமாக நடைபெறும். வியாபாரங்கள் விறுவிறுப்பாக நடைபெறலாம். சிக்கல்களைத் தவிர்த்துக் கொள்ளலாம். வாடிக்கையாளர்களின் நன்மதிப்பைப் பெறுதல்கிட்டும்.

# யாழ்.பல்கலை வெளிவாரிப் பரீட்சைகள் உரிய காலத்தில் நடைபெறுமா? கையறு நிலையில் மாணவர்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக வெளிவாரிப் பரீட்சைகள் குறித்து தெளிவான முடிவுகள் எவையும் இற்றைவரை கிடைக்காததனால் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்கள் கையறு நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்,

கடந்தமாதம் யாழ்.பல்கலைக்கழக வெளிவாரிப்பிரிவு கலைமாணி பகுதி 1, பகுதி 11, (இறுதியாண்டு) பரீட்சைகளுக்கான விண்ணப்பங்களை பொருத்தமானவர்களிடமிருந்து கோரப்பட்டிருந்தமை தெரிந்ததே.

மேற்படி பரீட்சைகள் டிசெம்பர்மாத நடுப்பகுதியில் நடைபெறும் என அறிவித்தல் விடுக்கப்பட்டே விண்ணப்பங்கள் கோரப்பட்டன.

ஆனால் தற்போது குறித்த காலப்பகுதியில் பரீட்சைகள் நடத்துவது பற்றிய உறுதித்தன்மை சம்பந்தப்பட்ட தரப்பில் இருந்து வெளியிடப்படவில்லை.

சம்பந்தப்பட்ட பிரிவின் பொறுப்பு வாய்ந்த அதிகாரி உள்ளதனால் பரீட்சைகள் இருவாரம் வரை தள்ளிப் போடப்படலாம் எனவும் மேற்படி பொறுப்பாளர் வந்து சேர்ந்த பின்னர் டிசெம்பர் இறுதி வாரத்தில் அல்லது ஜனவரியில் பரீட்சைகள் நடைபெறலாம் எனவும் சம்பந்தப்பட்ட தரப்புகளை அணுகும் மாணவர்களுக்கு உறுதியற்ற முடிவுகள் கூறப்பட்டு வருகின்றன.

இதனால் மாணவர் மத்தியில் பரீட்சை பற்றிய குழப்ப நிலை ஒன்று உருவாகியுள்ளதுடன் அது அவர்களுடைய ஊக்கமான கல்விச் செயற்பாட்டிற்கு தடைக்கல்லாகவும் அமைந்திருப்பதை அவதானிக்க முடிகிறது. (உ)

## மணி ஒலிக்க அனுமதி

(யாழ்ப்பாணம்)

கோப்பாய்ப் பிரதேசத்தில் உள்ள ஆலயங்கள் மற்றும் தேவாலயங்களின் பூஜை மற்றும் ஆராதனை வேளைகளில் மணி ஒலிப்பதற்கு மீண்டும் படைத்தரப்பினரால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பிரதேச ஆலய நிர்வாகிகள், தேவாலயப் பிரதிநிதிகள் ஆகியோர் ஈ. பி. டி. பி. யின் யாழ். மாவட்ட எம். பி. கே. வி. குகேந்திரன் இடம் மணியொலிப்பதற்கான தடைவிதிப்புப் பற்றி மகஜர் ஒன்றினை கையளித்ததுடன், இது விடயத்தில் உடன் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கோரியதை அடுத்து, அவர் யாழ். மாவட்ட கட்டளைத் தளபதியுடன் தொடர்பு கொண்டார். மீண்டும் மணி ஒலிப்பதற்கான அனுமதி வழங்கப்படுவதாக வெள்ளிக்கிழமைபடைத்தரப்பால்தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நூல்வெளியீடு

(மல்லாகம்)

யாழ்ப்பாண விவசாய கல்லூரி மாணவர்கள், விவசாய பயிர், மண், களைகள் சம்பந்தமான ஆய்வைக் கொண்ட மதுரம் என்னும் நூலை வெளியிடுவதற்குரிய ஒழுங்குகளை மேற்கொண்டு வருகின்றனர். விரைவில் இச் சஞ்சிகை வெளிவருமென அம் மாணவ மன்றத்தினர் அறிவித்துள்ளனர். (உ-ப-14)

## பாம்பு தீண்டியது

(யாழ்ப்பாணம்)

காரைநகர் மணற்பிட்டியைச் சேர்ந்த கந்தையா மகாதேவன் (வயது-55) பாம்பு தீண்டியதால் காரைநகர் வலந்தலை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (உ-5)

## ஒளி விழா

(சங்கானை)

வலிகாமம் மேற்கு பிரதேச செயலகத்தின் ஒளி விழா எதிர்வரும் 19 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி விழா பிரதேச செயலர் ந. வேதநாயகன் தலைமையில் இடம் பெறும். (ச-24)

## துன்னாலை

# காசிநாதர் வித்தியாலயத்தில் இடம்பெற்ற நடமாடும் சேவை

(துன்னாலை)

வடமராட்சி தெற்கு, மேற்கு. கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் கிராம மட்டத்திலான நடமாடும்சேவை கடந்த புதனன்று யா/துன்னாலை காசிநாதர் வித்தியாலயத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் மக்கள் குறை கேட்டல் நிகழ்வு முக்கிய அம்சமாக இடம்பெற்றது.

ஈ.பி.டி.பி.யின் உடுப்பிட்டி தொகுதி அமைப்பாளரும் கரவெட்டி பிரதேச சபைத் தலைவருமான வல்லிபுரம் நடராசா கலந்துகொண்டு, ஏராளமான பொதுமக்களின் குறைகளைக் கேட்டறிந்தார்.

இக்குறைகேட்டல் நிகழ்வில் சட்டவிரோத மண் அகழ்வு குறித்து விரிவாக ஆராயப்பட்டதுடன், அதற்கெதிரான நடவடிக்கைகளும் உடனடியாகவே மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன், சம்பந்தப்பட்ட பகுதியில் நிலவும் குடிநீர் பிரச்சினை சீரற்ற வீதிகள்கட்டாக்காலிகளின் தொல்லை என்பவை குறித்து பொது மக்களால் எடுத்துக்கூறப்பட்டதற்கு வெகுவிரைவில் இவற்றுக்கு சாதகமான முடிவுகள் எடுக்கப்படும் என உறுதிமொழி வழங்கப்பட்டது.

அடுத்து, கசிப்பு உற்பத்தியை தவிர்க்கும் வகையில், சனசமூக நிலையங்கள் தோறும் விழிப்புக்குழுக்களை அமைத்து அவற்றினூடாக தொடர்பு கொள்ளும் பட்சத்தில், தாம் பொலிஸாருடன் தொடர்பு கொண்டு உரிய நடவடிக்கை எடுப்பதாக, கரவெட்டி பிரதேச செயலராலும், கரவெட்டி பிரதேச சபைத் தலைவராலும் உறுதிப்பாடு வழங்கப்பட்டது. (உ-41)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

## இன்று ஒரு தகவல்

# புத்தி தெளிந்த பயில்வான்

ஒரு ஊரிலே ஒரு பயில்வான் இருந்தான. அவன் பெரிய கேடி. ஒருவருக்கும் பயப்படான் அவனைக்கண்டால் அந்த ஊரே கலங்கும். கப்பம் வாங்குவது, யாராவது கொடுக்காது விட்டால்அல்லது ஏதாவதுநியாயம் கதைத்தால், எல்லாம் அடித்து நொருக்கி துவம்சம் செய்து விடுவான். அவனை எதிக்குர்ம் துணிவுயாருக்குமில்லை, அதனால் அவனே தனிக்காட்டு ராசாவாகஇருந்தான். அவனிடம் கத்திகள, கோடரிகள், ஈட்டிகள், வாள்கள், பொல்லுகள் எனப்பல பயங்கரஆயுதங்கள்இருந்தன. காட்டுக்கு போவான், வேட்டையாடுவான், கள்ளுக்கடையில் கள்ளை வாங்குவான், குடிப்பான், இறைச்சியைப் புசிப்பான். ஒரே அட்டகாசம் தான்.

அந்த ஊரில் ஒரு சந்நியாசியுமிருந்தார். இவனுடைய அட்டகாசங்களை எல்லாம் பாத்திருக்கிறார். ஆனால் அவன் இவரோடே எந்த வம்புக்கும் போவதில்லை. அவசியமுமில்லை. அனால்சந்நியாசி அவனுக்கு நல்லதொருபாடம் புகட்ட நினைத்தார். அதற்காக சிந்தனை செய்தார். அவர் ஒரு திட்டத்துடன் தருணம் ஒன்றை எதிர் பார்த்து காத்திருந்தார்.

அந்த பயில்வான் ஒரு நாள் தன் காரியங்களை எல்லாம் முடித்துக் கெக்ண்டுவீடுபோவதைக் கண்டார், இந்த சந்நியாசி. இரண்டு மணித்தியாலம் கழித்து அவன் வீட்டுக்குப் போனார் இந்த சந்நியாசி

பயில்வான் தான் வேட்டையாடிக்கொண்டு வந்த முயலைச் சுட்டு உப்புத் தூள் பிரட்டி திரும்ப வாட்டிகள்ளையும் குடித்து இறைச்சியையும் சாப்பிட்டுவிட்டு படுத்து இருந்தான். அவனைச் சுற்றி அவனுடைய காவலர்களும் படுத்திருந்தனர். அதாவதுகத்திகள், கோடாரிகள், ஈட்டிகள் பொல்லுகள், வாள்கள் எல்லாம் பரப்பி இருந்தன.

இந்த வேளை சாமியார் உள்ளே புகுந்தார். நல்ல குறட்டை விட்டு தூங்கிக் கொண்டிருந்தான் அந்தப் பயில்வான். அவன் நித்திரையைக் குளப்பாமல், முன்னால் இருந்த மரத்தடியில் இருந்து விட்டார். நெடு நேரமாக இருந்தார். அவன் மெல்ல அருண்டான். முன்னால் இருந்த மரத்தடியில் ஒரு உருவம். உடனே அருகிலிருந்த வாளைக் கையில் பிடித்த படி நன்றாக உருவத்தைப் பார்த்தான். ஓ அது சாமி! என்று நினைத்தபடி என்னசாமியார் வந்து பேசாமல்இருக்கிறியள். கூப்பிட்டிருந்தால் எழும்பியிருப்பேனே. வந்துகனநேரமோ என்றெல்லாம் விசாரித்தான். இப்படியாக உரையாடிக் கொண்டுடிருக்க சாமியார் உன் நித்திரையைக் குழப்பக் கூடதென இருந்தேன். அது உன் சுதந்திரம். மற்றவர்கள் விடயத்தில் தலையிடுவது கூடாத காரியம். அதனாலேயே எழும்புமட்டும் காத்திருந்தேன் என்றார். அது சரி உன்னைச்சுற்றி இவ்வளவு ஆயுதங்களையும் பரப்பிவைத்திருக்கிறாயே இதெல்லாம் எதுக்கு என்றார் சாமியார். அதற்கு அவன் இதெல்லாம் என் காவல் காரர்கள். இவை தான் என்னைக்காக்கின்றன என்றான் பெருமையாக.

எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டிருந்தாயே சாமியார், பேசத் தொடங்கினால் ''தம்பிநீ இவ்வளவுநேரம்நித்திரை கொண்டிருந்தாயே அந்தவேளை ஒரு சிறுபையன் வந்துஉன்ஆயுதத்தாலேயே உன்னைக் கொன்று போட்டு போயிருக்கலாம். நீ நித்திரை செய்யும் போதுஇவைதானாக இயங்குமா? இந்தச் சடப் பொருளை நம்பி உன் பாதுகாப்பை ஒப்படைக்கலாமா? கடவுள் ஒருவர் தவிர பாதுகாப்புஎங்குமில்லைத் தம்பி'' என்று ஒரு சிறு பிரசங்கமே செய்து போட்டார். அப்பொழுது தான் அவனுக்கு ஞானம் பிறந்தது. அந்த நிமிடமே அவன் அந்த சாமியின் காலில் விழ்ந்து தன் தவறுக்காக மனம வருந்தி இனி மேல் நான் தவறான வழிகளில் போக மாட்டேன் என்றான். வேதத்தில்ஒருவசனம் உண்டு.

''கர்த்தர் நகரத்தைக் காவலாரகில் காக்கிறவன் வேலை விருதா'' என்று.

தொகுப்பு

மு.கிருஷ்ணன்

க. பொ. த. (சாதாரண தர)

கணித பாட 2ம் பகுதி வினாத்தாள்

# ஏற்கனவே வெளியாகியது?

## ஒன்றின் விலை ஆயிரம் ரூபாவாகும்

(சுண்டுக்குளி)

கல்விப் பொதுத்தாரதர சாதாரண பரீட்சைக்கான கணித பாடத்தின் இரண்டாம் பகுதி வினாத்தாள்கள் முன் கூட்டியே வெளியானதாக உலாவியசெய்திகள்நேற்றைய தினத்துடன் முடிவுக்கு வந்ததாகதெரியவந்துள்ளன.

மேற்படி பரீட்சையின் கணிதபாடஇரண்டாம்பகுதி வினாத்தாள் பரீட்சைக்கு முன்னதாகவே கொழும்பில் வெளியாகியிருப்பதாக யாழ். மாவட்ட பரீட்சார்த்திகளிடையே வதந்தி ஒன்று உலாவி வந்தது.

இதனை ஊர்ஜிதப்படுத்தும் வகையில் பரீட்சைக்கு முந்தைய தினத்தன்று யாழ்ப்பாணம் பிரதான வீதிப்பகுதியில் இப்பாட வினாத்தாளகள் விற்பனையாவதாக தகவல்கள் கிடைத்தன.

மாணவர் கூட்டம் அங்கலாய்ப்புடன் அங்கு அலைமோதியதை சாதகமாய்ப் பயன்படுத்திய மோசடிக்காரர்கள் வினாத்தாள் ஒன்றினை 500 ரூபாவில்இருந்து 1000 ரூபா வரையில் விற்பனை செய்தனராம்.

இதை நம்பி இரவிரவாக கண்விழித்து கணிதப் பேப்பரை கரைத்துக் குடித்த மாணவர்பலருக்குநேற்றைய தினம், பரீட்சை மண்டபத்தில் வினாத்தாளைப்பார்த்த போது ஏமாற்றமே கிடைத்தது.

காசு கொடுத்து வாங்கிய வினாத்தாளுக்கும், உண்மையான பரீட்சை வினாத்தாளுக்கும் இடையே யாதொரு ஒற்றுமைப்பாடும் காணப்படவில்லையாம். (உ-110)

## சமுர்த்தி செயலணி

(சங்கானை)

வலி. மேற்கு பிரதேச செயலர் பிரிவிலுள்ள 25 கிராம சேவை அலுவலர் பிரிவுகளிலும் சமுர்த்தி செயலணிகள் அமைக்கும் நடவடிக்கைகள் யாவும் பூர்த்தியடைந்துள்ளன.

அமைக்கப்பட்ட சமுர்த்திச் செயலணிகள் இரு வலயப் பணிமனையின் கீழ் அடுத்த வருடத்திலிருந்து தமது செயற் பாட்டை மேற்கொள்ளும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-24)

## நெற் செய்கை வழிகாட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண விவசாய திணைக்களமும் பட்டினிக்கெதிரான நிறுவனமும் இணைந்து 'நெற்செய்கை வழிகாட்டி பெரும் போகம்-2000' எனும் தலைப்பிலான நூல் ஒன்றினை வெளியிட்டுள்ளன.

இவ் இலவச வெளியீட்டில் யாழ். மாவட்டத்தில்2000/2001 பெரும் போகத்தில்விவசாயத்திணைக்களமும் பட்டினிக் கெதிரான நிறுவனமும் இணைந்து நடத்துகின்றநெற் செய்கை தொடர்பான பயிற்சி வகுப்பில் வழங்கப்பட்ட விவசாய தகவல்கள் அடங்கியுள்ளன. (உ)

## ஆண்டின் இறுதி கூட்டம்

(தென்மராட்சி)

நெல்லியடியில் தற்போது இயங்கிவருகின்ற சாவகச்சேரி நகரசபையின் இவ்வாண்டுக்கான இறுதிக் கூட்டம் அண்மையில் நடைபெற்றது.

நகரசபைத் தலைவர் பெ. தனபாலசிங்கம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் சாவகச்சேரியின் முன்னாள் நகரசபையின் தலைவர் அமரர் சி. க. மயில்வாகனத்தின் மறைவு குறித்து இரங்கல் தீர்மானம் எடுக்கப்பட்டது.

அத்துடன்சபையின் 2001ம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்டமும் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இதேவேளை வடமாகாண புனர்வாழ்வு புனரமைப்பு அதிகார சபையினால் புனர்வாழ்வுத்திட்டங்களுக்கென 40 லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டதாகவும் தெரிய வந்துள்ளது. (க-77)

## யாழ். குடாநாட்டில் 5 ஆயிரம் 'குடும்பங்களுக்கு வீட்டுத் தோட்டம் அறிமுகம்

(தென்மராட்சி)

பட்டினிக்கு எதிரான நிறுவனம் அடுத்த வருடத்தில் குடாநாட்டில் 5 ஆயிரம் குடும்பங்களுக்கான வீட்டுத் தோட்டம் மரக்கறிச் செய்கைத் திட்டமொன்றினை அமுல் செய்யவுள்ளதாக அந் நிறுவனத்தின்நிர்வாகஇயக்குநர்எஸ். சர்வேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இத்திட்டத்திற்கான பயனாளிகளைத் தெரிவு செய்யும்பணிகள் கிராமசேவையாளர்கள் மூலம் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், தெரிவு செய்யப்படும் பயனாளிகள் சிறுசிறு குழுக்களாகப் பிரிக்கப்பட்டு, அவர்களுக்கான பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுமெனவும், இத் திட்டத்தில் ஈடுபடுபவர்களுக்கு இலவசமரக்கறிவிதைகள மற்றும் சிறு உபகரணங்களும் வழங்கப்படுமெனவும் குறிப்பிட்டார். (க- 77-12)

## கிளினிக்பிரிவு இட மாற்றம்

(மந்திகை)

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலை கிளினிக் பிரிவு அருகில் புதிதாக கட்டப்பட்ட கட்டடத்திற்கு மாற்றப்பட்டுள்ளதாக மாவட்ட வைத்திய அதிகாரி எஸ் கதிரவேற்பிள்ளை தெரிவித்துள்ளார்.

இதுவரை காலமும் வெளிநோயாளர் பிரிவில் இயங்கி வந்த இப்பிரிவு கட்டிட வேலை மற்றும் இடநெருக்கடியை அடுத்து இவ் விடத்திற்கு மாற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதற்கு அத்தியாவசிய வசதிகள் இல்லையெனவும் அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ள உள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (க-23)

## வீதி திருத்தம்

(இணுவில்)

இணுவில் தெற்கு குளக்கரை வீதி, தற்போது திருத்தம் செய்யப்பட்டுள்ளது. (உ-49)

★

## திருத்துமாறு கோரிக்கை

(வடமராட்சிகிழக்கு)

வடமராட்சி கிழக்குப் பகுதியில் மருதங்கேணி வீதியை உடன் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கே.வி.குகேந்திரனிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதுவிடயம் தொடர்பாக அவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் முறையீடு செய்துள்ளதாக மேலும் அறியப்படுகிறது.

இதுவிடயத்தில் உடன் நடவடிக்கை மேற் கொள்ளப்படாதுவிட்டால் மறியல் பேராட்டம் நடத்துவதை தவிர வேறு வழியில்லை என அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

குறிப்பிட்டவீதி கடந்த 20 வருடங்களிற்கும் மேல் திருத்தம் செய்யப்படாததால் இவ் வீதியால் பயணம் செய்யும் பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர் நோக்குவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (க-43)

# புலித் தோலுக்கு தண்டனை ரூ.10,000

(கம்பளை)

புலித்தோலொன்றை வைத்திருந்ததற்காக கம்பளை மாவட்ட தமிழ் இளைஞன்ஒருவருக்கு பத்தாயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

புசல்லாவை பகுதி பெருந்தோட்டம் ஒன்றில் வசிக்கும் மேற்படி இளைஞன் புலித்தோல் வைத்திருப்பதாக வனவிலங்கு பாதுகாப்பு அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலை அடுத்து அவ் இளைஞன் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இவ்வழக்கினை விசாரித்த கம்பளை மாவட்ட நீதிபதியுடர் குணரட்ண இளைஞனுக்கு பத்தாயிரம் ரூபா அபராதம் விதித்து தீர்ப்பளித்துள்ளார். (இ)

## கோப்பாய் சுற்றிவளைப்பு

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் வடக்குப் பகுதி நேற்று இராணுவத்தினரின் சுற்றி வளைப்பு தேடுதலுக்கு உள்ளாக்கப்பட்டது.

நண்பகல் வரை நீடித்தஇச் சுற்றி வளைப்பு நடவடிக்கையின் போது, சந்தேகத்தின் பேரில் எவரும் கைது செய்யப்பட்டதாகதெரியவரவில்லை.

இதேவேளை, கோப்பாய் பூதர் மடம் பகுதியில், மறிப்புக்களை போட்டு அப்பகுதியூடான போக்குவரத்தில் ஈடுபட்ட அனைவரும் இராணுவத்தினரால் சோதிக்கப்பட்ட பின்னரே பயணம்செய்யஅனுமதிக்கப்பட்டனர். (உ)

## நுளம்புகள் ஒழிப்பு

(மந்திகை)

பருத்தித்துறை சுகாதார வைதிய அதிகாரி பிரிவில் மலேரியா ஒழிப்புப் பணிகள் மும்முரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

நுளம்பு பெருக்கத்தைக் கட்டுப்படுத்தும் வகையில் மலத்தியோன் தெளிக்கும் பணிகள் இடம் பெற்று வருவதுடன், பற்றைகளை அழித்து ளநும்புப் பெருக்கம் கட்டுப் படுத்த நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

அத்துடன், நுளம்புப்பெருக்கம் அதிகமுள்ள பகுதி மக்களுக்கு நுளம்பு வலையும் விநியோகிக்கப்பட்டு வருகிறது. (உ-23)

காட்டு மிருகங்கள்

# அச்சுவேலிக்கு படையெடுப்பு விவசாயிகள் திண்டாட்டம்

(அச்சுவேலி)

அச்சுவேலிப் பகுதியின் கிழக்குப்புற கரையோரப் பகுதி தோட்ட நிலங்களில், காட்டு மிருகங்களின் அட்டகாசம் அதிகரித்து வருவதாக அங்கு விவசாய முயற்சிகளில் ஈடுபட்டு வரும் கமக்காரர் கவலை தெரிவித்துள்ளனர்.

தென்மராட்சிப் பகுதியின் காடுகளில் வசித்து வதந் பன்றிகள் மற்றும் குரங்குகள் அங்கு இடம் பெற்ற இராணுவ நடவடிக்கைகளை அடுத்து, மேற்படி பகுதிகளில் தஞ்சமடைந்திருப்பதே இவ்வாறு நிகழக்காரணம் எனக் கூறப்படுகிறது.

இரவு வேளைகளில் அச்சுவேலிப் பகுதியின் கிழக்குப்புற கரையோரப் பகுதிகளான நாச்சிமார்கோவில், பன்னாரை, இறதாவில் ஆகிய இடங்களின் விளை நிலங்களில் புகுந்து பயிர்களை நாசம் செய்வதுடன் அறுவடைநடவடிக்கையையும்இம் மிருகங்களே மேற்கொண்டு வருவதால் பல நாள் பாடுபட்ட விவசாயிகள் பலனைப் பெறாது ஏமாற்றத்துடன் திரும்பிவரவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக விவசாயிகள் பலர் பயிர்செய்கை நடவடிக்கைகளின் நாட்டம் குன்றிக் காணப்படுவதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (உ-14)

# வேலை நிறுத்தம் செய்வதை இந்திய அரசு தடை செய்துள்ளது

(புதுடில்லி)

வேலை நிறுத்தம் செய்வது சட்ட விரோத மானதென்று இத்திய மத்திய அரசு, அஞ்சல் தொழிலாளர்களுக்கு அறிவித்துள்ளது.

நேற்றுத்தொடக்கம் இச்சட்டம் ஆறுமாதத்துக்கு செல்லுபடியாகுமென்றும் அஞ்சல் தொழிலாளர்கள் இதனைக் கடைப்பிடிக்க வேண்டுமென்று அரசு அறிவித்துள்ளது.

தற்காலிக ஊழியர்களை நிரந்தர ஊழியராக்க கோரியும் ஓய்வூதிய வசதிகளைச் செய்து கொடுக்கும்படியும் ஆறு இலட்சத்துக்கு மேற்பட்ட அஞ்சல்ஊழியர்கள் தொடர்ந்து வேலை நிறுத்தம் செய்து வருவதும் அரசும் அஞ்சல் தொலைத் தொடர்பு அமைச்சும் வேலை நிறுத்தத்தை நிறுத்தும் படி கோரியும் எதுவும், கைவிடப் படாமையும். நேற்று முன் தினமும் டில்லியில் அஞ்சல் ஊழியர்கள் ஊர் வலமாகச் சென்றமையும் தெரிந்ததே.

எனினும், அரசு தங்களது கோரிக்கைகளை ஏற்காத வரை வேலை நிறுத்தம் தொடருமென்று அஞ்சல் ஊழியர் சங்கப் பிரமுகர்கள் தெரிவித்துள்ளனர். (து)

# பூனைகளை வதைத்த அமெரிக்க பெண்ணுக்கு 4 மாத சிறைத்தண்டனை

(வாஷிங்டன்)

தனது வீட்டில் 59 பூனைகளை அடைத்து வந்திருந்த அமெரிக்கப் பென் ஒருவருக்கு நீதிமன்றம் 4 மாத சிறைத் தண்டனை விதித்துள்ளது.

சுகாதார அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலின் பேரில், மேற்படி பெண்மணியின் வீட்டில் இருந்த இறந்த பூனை ஒன்று உட்பட 59 பூனைகளை மீட்டுள்ளனர்.

இவற்றில் பல மோசமான சுகாதாரமற்ற நிலையிலும் போதிய உணவற்ற நிலையிலும் காணப்பட்டதாகவும் தெரியவந்துள்ளது.

தற்போது மேற்படி பெண்ணிற்கு மன நலஆலோசனைகளும் வழங்கப்பட்டு வருகிறது. (உ)

# ஏழை நாடுகளுக்குஉதவும் ஐ.நா. வின் சிபார்சுக் குழு

(ஜெனிவா)

ஏழை நாடுகளுக்கு நிதி உதவும் விடயத்தில் உலக நிறுவனங்களுக்கு உதவ ஐ.நா ஒரு குழுவை அமைத்துள்ளது.

உலகிலுள்ள ஏழை நாடுகளுக்கு பொது நிதி அமைப்புகள் சரிவர உதவிகளைச் செய்வதில்லையென்றும் நம்பிக்கை யீனங்களால் நிதி நிறுவனங்கள் அந்தவகை ஏழை நாடுகளுக்கு உதவ முன்வருவதில்லை யென்றும் ஏழை நாடுகளின் பிரச்சினைகள் சரியாக

## உலக தரிசனம்

எடுத்துரைக்கப்படுவதில்லையென்று அதனால் உலக நிதி நிறுவனங்களில் உதவிகிட்டுவதில்லையென்றும் தெரிவதால் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் இதனை அமைக்கிறது. என்று ஐ.நா. வின் செய்திக் குறிப்பொன்று கூறுகின்றது.

ஐக்கிய நாடுகள் சபை அமைத்துள்ள இந்தக் குழு வறிய நாடுகளில் எவை எவைக்கு எப்படிப்பட்ட நிதியுதவி வழங்கலாமென உலக நிதிஸ் தாபனங்களுக்கு பரிந்துரைக்கும்என்று அந்தசெய்தி தெரிவித்துள்ளது. (து)

# பாகிஸ்தான் தூதுவர் நாடு கடத்தப் பட்டார்

(டாக்கா)

பங்களா தேஷில் பாகிஸ்தான் தூதுவராக இருந்த ஸ்பொன்ராஜா இருபத்து நான்கு மணித்தியால அவகாசத்தில் நாடு கடத்தப்பட்டார்.

சுதந்திரதினத்தை யொட்டி ராஜா பங்களாதேஷ் அரசில் கருத்துக் களைக்கண்டித்து உரையாற்றியதை அடுத்தே இந்தமுடிவுக்கு பங்களாதேஷ் வந்திருப்பதாய் தெரியவந்துள்ளது.

ஒருவெளிநாட்டுத் தூதுவர் பங்களாதேஷிலிருந்து நாடு கடத்தப்படுவது இதுவே முதல் தடவையாகும்.

1971ஆம் ஆண்டு முப்பது இலட்சம் மக்களை பலி கொண்ட பாகிஸ்தான் பங்களாதேஷ்யுத்தத்தின்நினைவு தினமான இன்று மக்கள் பாகிஸ்தானிடமிருந்து விடுதலைபெற்ற பெருநாளாகக் கொண்டாடுகிறார்கள்.

இதேவேளை உலகநாடுகளால் சர்ச்சைக் குரியவராகக் கருதப்படும் பங்களாதேஷ் பிரமுகரான ஷேக்ஹசீனா 1971ம் ஆண்டு இடம்பெற்ற படுகொலைகளுக்கு பாகிஸ்தான் மன்னிப்புக் கோர வேண்டும் என கோரியிருந்ததும் ஏற்கனவே தெரிந்ததே. (க-து)

# தன்னைப் பற்றிய விபரங்களை வெளியிட வேண்டாம் என ஜனாதிபதி தெரிவித்தார்

## ஆளுநர் தெரிவிப்பு

(மணிலா)

பிலிப்பைன்ஸ் அதிபர் ஜோசேப் எஸ்ராடா தன்னைப் பற்றிய விபரங்களை நீதிமன்றில் கூற வேண்டாமென்று தன்னிடம் கூறியதாக மாநில ஆளுநர் தெரிவித்தார்.

ஆளுநர் லூ விமின்சன் மேலும் கூறுகையில்; பிலிப்பைன்ஸின் அமைச்சர்கள் தன்னைநாடி விசாரணையின் போது தெரிவிக்கப்பட்ட விடயங்களை சொல்லவேண்டாம் என செனட்டில் சாட்சியம் கூறினார். (து)

# இராணுவத்தினருக்கு சம்பள உயர்வு உண்டு

(கோலாலம்பூர்)

இராணுவத்தில் உளளவர்களுக்கு பதவி உயர்வு கிடைக்காவிட்டாலும் சம்பள உயர்வுகள் கிடைத்துக்கொண்டேயிருக்குமென்று மலேசிய பாதுகாப்பு அமைச்சர் நஜீர் தெரிவித்தார்.

அவர் மேலும் தொடர்கையில்; உயர்பதவிகளிலுள்ளவர்களுக்கு சம்பள ஏற்றம் நின்று விடாது சேவை முடியும் வரை வருடா வருடம் சம்பள உயர்ச்சி கிடைக்குமென்றும் தெரிவித்தார்.

இதே வேளை, மூத்தஇராணுவ வீரர்களின் கருத்துக்கள் திரட்டி ஆய்வுநடத்தப் படுவதாகவும் கூறினார்.

இதேவேளை, சேவை அடிப்படையில் கடமை புரிவோருக்கும் சலுகைகள் வழங்கப்படுமென்று. தெரிவித்தார். முக்கியமாகச் செயலிழந்த இராணுவ வீரர்களுக்கும் சம்பளம் கொடுக்கும் திட்டம் அமுல்ப் படுத்தப்படுமென்றும் தெரிவித்தார். (து)

# வாழ்த்துப் பெறும் அமெ.அதிபர்

(ஜடா)

வளை குடா நாடுகள் அமெரிக்க ஜனாதிபதியாகத் தெரிவாகியுள்ள ஜோர்ஜ் டபிள்யூ புஷ்ஷிற்கு உலக நாட்டு தலைவர்கள் வாழ்த்துச் செய்திகளை அனுப்பி வைத்துள்ளனர்.

குறிப்பாக சவுதி அரேபிய இளவரசர், ஐக்கிய அரபுக் குரியரசு அதிபர், கட்டார்அதிபர்ஆகியோர்புதிதாகத் தெரிவான புஷ்ஷைவாழ்த்தியிருக்கிறார்கள். (க-து)

# பேராதனை பல்கலைக்கு கணனி உதவி

(சிங்கப்பூர்)

சிங்கப்பூர் தொழில்நுட்ப மாணவர்கள் இலங்கைக்கு நூறு கணனிகளை உதவ முன்வந்துள்ளார்கள்.

பேராதனைப் பல்கலைக் கழகம் கேட்டுக் கொண்டதற்கிணங்க இந்த உதவியைச் செய்ய முன்வந்துள்ளனர்,

அடுத்தமாதம் பத்து மாணவர்கள் நூறு கணனியுடன் இங்கு வருவார்களென்று பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கணனி சோதனைக் கூடம் அமைப்பார்களென்றும் தெரிவிக்கப்படுகிறது.

இங்குள்ள மாணவர்களுக்கும் மற்றும் துறையினர்களுக்கும் இவர்கள் பத்துப்பேரும் சிறிது காலத்துக்குப் பயிற்சி அளிப்பார்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (து)

# சிங்கப்பூரில் ஆரம்பமாகும் சாரணர் எழுச்சி விழா

(சிங்கப்பூர்)

சிங்கப்பூரில் உலகளாவிய பெரிய சாரணர் விழா நடைபெற இருக்கிறது.

இம்மாதம் இருபத்தி நான்காம் திகதி ஆரம்பமாகும் சாரணியர் விழா பல நாட்களுக்குத் தொடர இருக்கிறது.

பல்வேறு நாடுகளைச் சேர்ந்த பதினையாயிரத்து ஐந்நூறு பிரதிநிதிகள் இவ் விழாவில் கலந்து கொள்வார்களென எதிர்பார்க்கப்படுவதாகத் தெரியவருகிறது.

சிங்கப்பூரின் நான்கு பிரதான மையங்களில் இந்த சாரணர் விழா நடைபெற இருப்பதாகவும், அதற்குரிய ஏற்பாடுகள் நடைபெறுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளைஇந்தசாரணர் விழாவில் நாட்டுமக்கள் யாவரையும் கலந்து கொள்ளும்படி அரசு அழைப்பு விடுத்திருக்கிறது.

உலக சாரணர் விழாவின் முதல் நாள் நிகழ்ச்சியைச் சிங்கப்பூர் பிரதமந்திரிஆரம்பித்து வைக்கவுள்ளார். (க-து)

# பொன் விழாக்காணும் யூ. என். எச். சி. ஆர்

(ஜெனிவா)

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் அமைப்பின் பொன் விழா நேற்றுமுன்தினம் கொண்டாடப்பட்டது.

யூ. என். எச். சீ. ஆர். ஆரம்பிக்கப்பட்டு ஐம்பது ஆண்டுகள்நிறைவெய்தியதை ஒட்டியே பொன் விழாக் கொண்டாடப்படுகிறது.

மூன்று ஆண்டுகளுக்கு மட்டும் என்று ஆரம்பிக்கப்பட்ட யூ.என்.எச்.சி.ஆர். ஐம்பது ஆண்டுகளைத் தாண்டி விட்டது.

இந்த அமைப்பின பணிகள் நூற்றியிருபது நாடுகளில் இடம் பெறுகின்றன.

முப்பத்து மூன்று பணியாட்களுடன் ஆரம்பிக்கப்பட்ட இந்ததொண்டு நிறுவனத்தில் ஐயாயிரம் ஊழியர் பணியாற்றுகிறார்கள்.

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் அமைப்பாளரை இதன் சேவைக்காக இரண்டு முறை நோபல் பரிசு கொடுக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (து)

# பிரதமர் வாஜ்பாயின் முகமூடி கிழிந்தது

## முஸ்லிம் மதகுரு தெரிவிப்பு

(புதுடில்லி)

அயோதி பாபர் மசூதி விவகாரம் தொடர்பாக பிரதமர் வாஜ்பாய் தெரிவித்த கருத்தால் அவரது முகமூடி கிழிந்து விட்டதாக இந்திய முஸ்லிம் மதகுரு ஒருவர்தெரிவித்துள்ளார்.

சையிது முகமதுபுகாரிஎன்று அழைக்கப்படும் இவர்மேலும் கூறுகையில்; பிரதமரின் இந்த அறிவிப்பால் அவருடையஉள் மனதைப் புரிந்து கொள்ள முடிந்தது என்றும் குறிப்பிட்டார்.

பாபர் மசூதி இருந்த இடத்தில் இராமர் கோயில் கட்டுவது நாட்டின் ஒற்றுமைக்குப் பங்கம் ஏற்படுமென்றும் குறிப்பிட்டார்.

இது விடயம் தொடர்பாக இந்தியநாடாளுமன்றத்திலும் மூன்றுமந்திரிகள் உடனடியாக பதவி வில வேண்டும் என்றும் தகுந்த பரிகாரம் இதற்குத் தேட வேண்டுமென்றும் எதிர்க் கட்சியினர் கொண்டு வந்ததீர்மானம்தோல்வியைக் கண்டதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இதேவேளையில் இந்தியமக்களவையிலும், மாநிலங்கள் அவையிலும் நாளை திங்கட்கிழமை இவ்விவகாரம் தொடர்பாக விவாதிக்கப்படவிருப்பதாகவும் அறியப்படுகிறது. (க-து)

# பாகிஸ்தான் பிடிவாதத்தை விட்டு இந்தியாவுடன் பேச்சுக்கு வரவும்

## பெனாசீர்பூட்டோ வேண்டுகோள்

(லண்டன்)

பாகிஸ்தான் பிடிவாதப் போக்கைவிட்டு இந்தியாவுடன்பேச்சுவார்த்தையில்ஈடுபட வேண்டும் என்று முன்னாள்பாகிஸ்தான் பிரதமர் பெனாசீர் பூட்டோ பாகிஸ்தான் அரசைக் கேட்டுள்ளார்.

இந்தியாயுத்தநிறுத்தத்திற்கு இணங்கியுள்ள வேளையில் பாகிஸ்தனும்சிலதுறைகளில் விட்டுகொடுத்துபேச்சுக் குவர வேண்டும் என மேலும் அவர் கேட்டுக் சொண்டுள்ளார்.

தற்பொழுது வெளிநாடொன்றில் வாழும்பெனாசீர் பூட்டோ அவுட்லுக் என்ற ஆங்கில வாரப்பத்திரிகை ஒன்றுக்குக் கொடுத்த பேட்டியில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அந்தப் பேட்டியில் மேலும் தெரிவிக்கையில் சவூதியில் குடியேறியுள்ள முன்னாள் பிரதமர் நவாஷெரிப்பை நம்பி நான் ஏமாந்து விட்டேன் அவரின் முஸ்லிம்லீக் கட்சியுடன் இணைந்து மாபெரும் எதிரணியை உருவாகத்திட்டமிட்டோம் அவர் இராணுவ அரசுடன் இணைந்து சுயநலவாதியாக நாடுகடத்தப்பட்டுள்ளார் என்று தெரிவித்தார், [து]

# இலவச மூக்குகண்ணாடி

(வடமராட்சி கிழக்கு)

வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலையில் சுமார் 100 பேருக்கு இலவச மூக்குகண்ணடிகள் வழங்கும் நிகழ்வு இன்று 9.00 மணியளவில் இடம்பெற உள்ளது.

மாவட்டவைத்திய அதிகாரி மயிலேறும் பெருமாள் இந்நிகழ்வில் கலந்துகொள்ளவுளளது இங்கு குறிப்பிடத்தக்கது. (க-43)

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

ஆய்தாய்ந்து கொள்ளாதான் கேண்மை கடைமுறை தான்சாந் துயரம் தரும்.

குறள்

# வலம்புரி

## திசைமாறும் சந்தேகம்

விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் தனது மாவீரர் தின உரையில் நிபந்தனையற்ற சமாதானத்திற்குத் தயார் எனப்பகிரங்கமாக அறிவித்தார். இவ்வறிவித்தலை ர்வதேசமும் வரவேற்றது இதற்குப் பதிலளிக்கும் பொறுப்பு அரசினுடையதாக இருந்தபோதிலும், காலந்தாழ்த் தப்பட்டபின் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் அறிக்கையொன்றினை தலைவரின் உரைக்குப் பதிலாக வெளியிட்டார்

அவர் வெளியிட்டபதில் அறிக்கை நோர்வேயின் சமாதான முயற்சிக்கு எந்தளவுதூரம் உதவும் என்பது ஆராய்வுக்குரியது ஆனால் ஜனாதிபதியின் அனுமதியுடன் கதிர்காமர் விடுத்த அறிக்கை அமைச்சரவையில் பெரும் சர்ச்சையை - விசனத்தை ஏற்படுத்திவிட்டதென்பது மட்டும் உண்மை.

கடந்தவாரம் கொழும்பில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் கதிர்காமரின் அறிக்கை வாதப் பிரதிவாதங்களுக்குள்ளாகியது. பிரதிப்பாதுகாப்பமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்த கதிர்காமரின் அறிக்கை குறித்து, தான் செய்தி ஊடகங்கள் மூலமாகவே அறிந்துகொண்டதாகத் தெரிவித்துள்ளார்.

இதற்குப்பொறுப்புடன் பதிலளிக்கவேண்டிய பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்காவும், தமக்குமிது பற்றி எதுவும் தெரியாது என மொட்டையாகக்கூறிவிட்டு, ஜனாதிபதியின் அனுமதியுடன் தெரிவித்த ருத்தை விமர்சனம்செய்யும் அதிகாரம் நமக்கு இல்லை என்று கூறி அமைச்சரவையில் எழுந்த அதிருப்தியை அதுமட்டில் தணித்துக்கொண்டார்.

இது ஒருபுறமிருக்க தமிழர்களுக்கு எதிரான யுத்தத்திற்காக சர்வதேசங்களுக்கும் சென்று பிரச்சாரம் செய்தபோது அமைச்சர் கதிர்காமரைப் பாராட்டியசிங்கள அமைச்சர்கள், இப்போது பேச்சுவார்த்தைக்கு . சாதகமான பதிலை அறிவித்தபோது அச்சிங்கள அமைச்சர்கள் அவர்மீது சீற்றம் கொண்டுள்ளனர். இச்சீற்றத்திற்குக் காரணம் கதிர்காமர் தமிழரல்லவா? ஆகவே அவரும் தக்க நேரத்தில் தன்னினம் சார்ந்துவிட்டாரோஎன்ற சந்தேகமே.

அவரவர் தன்தன்இனத்தோடு நின்றால் சந்தர்ப்பத்தின்போது சந்தேகம் கொள்ளும் அவலம் ஏற்படாது என்பதை ஒவ்வொருவரும் உணர்ந்து கொள்ளவேண்டும்.

### பரமபிதா காட்டிய பாதை

# எதிலும் பிழை பிடிக்கும் மனப்பாங்கு நம் வாழ்வின் மேன்மைக்கு தடையே



நாளுக்கு நாள் தொழில்நுட்பவிருத்தியாலே முன்னேற்றமடைந்து வரும் உலகிலே, புதியவைகளாலே பூரிப்படைகின்றது ஒருமக்கள் சமுதாயம். அவற்றைக் காணாமலும் அவைகளின் நன்மை தீமைகளைப் பெரிதும் அறியாமலும் தமது வாழ்வைக் கழித்துக் கொண்டிருக்கின்றதுஇன்னுமொரு சமுதாயம். இவற்றிலே இரண்டாவது சமுதாயமாகவே எமது சமுதாயம் அமைந்துள்ளது. இங்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு என்ற குரல்கள் தொனித்துக்கொண்டிருந்த, போர் என்ற அரக்கன் எம் வாழ்வைச் சீரழித்துக்கொண்டிருக்கின்றான். நாம் ஒவ்வொருவரும் எமது கடமைகளைச்சரியாகச் செய்யாமல் அடுத்தவர் காரியங்களிலே தலையிட்டுக் கொண்டு சமூகத் தீமை செய்து கொண்டிருக்கின்றோம். இதனாலே அபிவிருத்தியோ எமக்கிடையே ஒற்றுமையோநிலவப்போவதில்லை. மாறாகப் பிழைபிடிக்கும் மனப்பான்மையும் குறைசொல்லும் மனப்பான்மையும் எமது வளர்ச்சிக்கு தடையாக அமைந்து காணப்படுகின்றன.

### திருமுழுக்கு அருளப்பர்

இத்தகைய ஒரு குறுகிய மனப்பான்மையுள்ள சமூகம் வாழ்ந்த காலத்திலே இயேசுவின் வருகைக்காகப் புனித திருமுழுக்கு அருளப்பர் மக்களை ஆயத்தம் செய்யப் புறப்பட்டார். அவர் மக்கள் சமுதாயத்தின் நிலையைச் சாடினார். மனந் திரும்பாவிடில் அடிமரத்தில் கோடரி வைத்த மரங்களைப்போன்று வெட்டுண்டு தீயில் போடப் படுவீர்கள் என்று எச்சரித்தார்.

இதனாலே மக்களும், வரி தண்டுவோரும் படைவீரரும் திருமுழுக்கு அருளப்பரிடம் வந்து நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்று கேட்டனர்.

அவர் மறுமொழியாக மக்களிடம் பகிர்ந்து வாழுங்கள் என்றும் வரிதண்டுவோரிடம் உங்களுக்குக் குறிக்கப்பட்ட தொகைக்குமேல் எதையும் தண்டாதீர்கள். இவ்வாறு படைவீரருக்கு ''நீங்கள் எவரையும் அச்சுறுத்திப் பணம் பறிக்காதீர்கள்; யார்மீதும் பொய்க்குற்றம் சுமத்தாதீர்கள் உங்கள் ஊதியமே போதுமென்று இருங்கள்'' (லூக் 3:11-14) என்று போதித்தார்.

அன்ரனிஅபீர்

### சீர்செய்யவேண்டும்

இவைகளின் அடிப்படையில் எம்மைத் திரும்பிப்பார்போமானால் நாமும் மனமாற்றம் பெற்று கிறிஸ்துவின் வருகைக்கு எம்மை ஆயத்தம் செய்யலாம். புதியவை சமைக்க; ஒழுங்கற்றவைகளையும் கரடுமுரடானவைகளையும், கோணலானவைகளையும் நாம் சீர்செய்ய வேண்டும். எமது உள்ளத்தின் தீய குணங்கள், வேண்டத்தகாதவைகள் களையப்பட்டு, தேவையானவைகள் சேர்க்கப்பட்டு, புதியபாதைக்கு ஆயத்தம் செய்ய வேண்டும். எனவே எமது கடமைகள், பொறுப்புக்களை ஒவ்வொரு நிலையிலும் உள்ளவர்கள் கடவுளுக்கு கணக்கு ஒப்புவிக்க வேண்டும் என்ற மனநிலையில் செய்வோமாக இருந்தால்எமது கடமைகள் எம் வழித்தோன்றல்களுக்கு நல்வாழ்வின வழியைக்காட்டும்.

### சமுதாயப்பங்களிப்பு

சமாதானமும் அபிவிருத்தியும் அடுத்தவர் கொண்டு வந்து தருவதல்ல. எமது ஒவ்வொருவரின் உள்ளங்களிலும், இல்லங்களிலும் உருவாகி எமது பங்களிப்புக்கள் சமூகத்திற்குப் பயனளித்து சமுதாயப் பங்களிப்புகள் எமது தேசத்தி வளர்ச்சியாக மாற்ற வேண்டும். என் பங்கும் உன்பங்கும் பகிர்வினை அளிக்குமாக இருந்தால், எங்கள் பங்கும் நம்பங்கும் நிட்சயமாக விருத்திற்கு வழிசமைக்கும்.

### யுத்த அவலத்தின் மத்தியிலும்

# தன்மானத்துடன் வாழும் யாழ். மக்களை அற்பசலுகைகளுக்காக மதம் மாற்ற முடியாது

## வட்டுக்கோட்டை சகோதரர் ஆரோன் விடுத்த கணை

இன, மத, மொழி சார்பற்று நடுநிலை வகிக்கும் தங்கள பத்திரிகையைத் தொடர்ந்தும் வாசிக்கும் பல்லாயிரக் கணக்கான வாசகர்களில் நானும் ஒருவன். ஆனாலும் கடந்த சில நாட்களாக தங்கள் பத்திரிகையில் பிரசுரமாகி வரும் சில செய்திகளில் கிறிஸ்தவமார்க்கமும், கிறிஸ்தவர்களும் பற்றிய குறிப்புகள் அதிலும் குறிப்பாக கடந்த 27. 11. 2000 அன்றைய பத்திரிகையில் ''குருஷேத்திரம்'' என்னும் பகுதியில் தம்பி ''விதுரன்'' அவர்கள் எழுதிய கட்டுரையும் கூட தங்கள் மதசார்பான நடுநிலை நோக்கை விட்டு தாங்கள் சற்றுச் சாய்ந்து விட்டதை அறிந்து கொள்ளக் கூடியதாக இருந்தது.

ஆகவே நானும் ஒரு மனம் திரும்பிய கிறிஸ்தவன் என்ற வகையிலும், எமது இறைபணியின் நோக்கத்தை தெளிவுபடுத்த வேண்டிய ஒரு சபைத் தலைவர் என்ற ரீதியிலும் தங்களது சாய்வு நிலையை நீக்கி சம நிலையாக்கும் நோக்குடன் சில தெளிவான பதில்களை இக் கடித மூலம் அறியத்தருகின்றேன். எமது நிலைப்பாட்டை குடா நாட்டில் வாழும் மற்றைய சமயத்தவர்களுக்கு்கு தெரியப்படுத்தும் ஒரு பாரிய பொறுப்பையும், அதன் மூலமாய் மதரீதியான பிளவுகளின்றி, கசப்புகளின்றி. வைராக்கியங்களின்றி நாம் அனைவரும் ஐக்கியமாய் வாழும் ஒரு சமூகம் என்ற உணர்வையும் குடா நாட்டு மக்களின் கவனத்துக்கு தாங்கள் கொண்டு வரவேண்டும் எனவும் அன்புடன் எதிர்பார்க்கின்றேன்.

தம்பி விதுரன் தனது கட்டுரையில் மத மாற்றம் என்ற சொல்லுக்குப் பதிலாக மன மாற்றம் என்ற சொல்லைப் பாவித்திருந்தால் மிகவும் பொருத்தமானதாயிருக்கும். ஏன் என்றால் ஆதியில் கடவுள் மனிதனைப் படைத்த போது அவன் இப்படித்தான் வாழவேண்டு என்று விரும்பினார், ஆனால் மனிதனோ கடவுளுக்கு கீழ்ப்படிய மறுத்து எப்படியும், மனம் போல் வாழலாம் என்ற நோக்கோடு கடவுள் தனக்கென வைத்திருந்த கோட்பாடுகளையும் நியதிகளையும் மீறி பஞ்சமாபாதகங்களையும் துணிவாகத்தான் செய்யத் தொடங்கினான் இன்றுவரை அவைகளிலிருந்து மீண்டு வந்து

> கடந்த 25-7-11-2000 திகதிய வலம்புரியில் குருஷேத்திரம் பகுதியில் விதுரன் எழுதிய 'மண்மீட்புப் போருக்கு அப்பால் ஓர் மதவாதப் போருக்கும் வழி கோலுமா?' எனும் கட்டுரைக்கு மறுப்புதெரிவித்து சகோதரர் ஆரோன் அனுப்பிய கடிதம் இங்கு அப்படியே பிரசுரமாகிறது. இதற்கானபதில் 25-12-2000ம் திகதிய குருஷேத்திரத்தில் வெளிவரும். (ஆ - ர்)

கடவுளின் நியதிப்படி வாழ முடியாதவனாயிருக்கின்றான். இதன் விளைவுதான் இன்று வடபகுதியில் மட்டுமல்ல முழு இலங்கையிலும், சர்வதேசமும் சந்திக்கின்ற யுத்த நெருக்கடிகள், இடம் பெயர் அவலங்கள், பரிதாப மரணங்கள், பட்டினிச் சாவுகள். ஆகவே தொடர்ந்தும் மனுக்குலம் இப்படி அவலப்பட்டு அழிந்து போவது கடவுளுக்குச் சித்தமில்லாதபடியால் ''அவர் தன்னுடைய வசனங்களை அனுப்பி அவர்களை அழிவுக்குத் தப்புவிக்கிறார்'' என்ற வசனத்தின்படி மனிதன் இப்படித் தான் வாழ வேண்டும் என்று கடவுள் எழுதி வைத்துள்ள சத்திய வேதாகமம் என்கிற பரிசுத்த புத்தகத்திலிருந்து மனிதன் வாழ வேண்டிய வழியை நாம் நல் ஆலோசனையாக ஒரு தனிப்பட்ட மனிதனுக்கோ/ ஒருகுடும்பத்தினர்க்கோ/ ஒருகுழுவினருக்கோ கூறுகிறோம்.

அதை அவர்கள் ஏற்றுக் கொண்டு தங்கள் தவறை உணர்ந்து மனம் திரும்பி கடவுள் நியமித்தவழிகளில் நடக்கத் தொடங்குகிறார்கள். உண்மையில் இது ஒரு மனி தனது இருதயத்தில் தானக ஏற்படும் மனமாற்றமே தவிர மதமாற்றமல்ல.

இப்படிப்பட்ட கிறிஸ்தவ அருட்பணியின் நோக்கத்துககு மதமாற்றம் என்ற சாயத்தைப் பூசுவது சரியானதல்ல இதை தம்பி விதுரன் முதலில் உணரவேண்டும்.

அடுத்துதம்பிவிதுரனின்செய்தியிலும் வலம்புரியின் சமீபத்தில்வெளியானசில நாளிதழ்களிலும்வந்த செய்திகளின் படி கிறிஸ்தவர்கள அற்ப சலுகைளைக் காட்டி மற்றவர்களை மதமாற்றம் செய்கிறார்கள் என்கிற கருத்து காணப்படுகிறது.

1995 யாழ். குடாவிலிருந்து வெளியேறிய 5 இலட்சம் மக்களும்இடம் பெயர்ந்து பட்ட அவலங்களும்அனுபவங்களுப் என்றும் மறக்க முடியாதவை. அந்த அவலங்களும், அனுபவங்களும் இன்றும் எமக்கு நினைவில் இருப்பதாலேயே இப்போதும் இடம் பெயர்வு நிலையில் உள்ள மக்களுக்கு பிரதிபலன் எதிர்பாராத, மனிதாபிமான அணுகுமுறையோடு கூட சில அடிப்படை வசதிகளை பற்பல சிரமங்கள் மத்தியிலும் குடா நாட்டிலுள்ள சில கிறிஸ்தவ சபைகள் செய்து வருகின்றனவே தவிர, சுயலாபம் கருதி செய்யப்படும் சலுகைகளல்ல என்பதை தம்பி விதுரன் புரிந்து கொள்ள வேண்டும். யாழ் குடா நாட்டிலுள்ள ஒவ்வொரு குடும்பத்திலும் குறைந்தது ஒருவராவது வெளிநாட்டுத் தொழில் வாய்ப்பைப் பெற்றிருக்கின்றபடியாலேயே இவ்வளவு நெருக்கடிகளின் மத்தியிலும் குடா நாடு தலை நிமிர்ந்து நிற்கிறது. ஆகவே வெறும் அரிசிக்கும் பருப்புக்கும் சீனிக்கும் மரம் விட்டு மரம் தாவும் குரங்கினைப் போல மதம் விட்டு மதம் தாவும் மக்களல்லகுடா நாட்டு மக்கள்.

அற்பசலுகைகளைப் பெற்றுக்கொண்டு தமிழ் மக்கள் மதம் மாறுவார்கள் என்றால் எப்போதோ அரசாங்கம் கொடுக்க ஆயத்தமாயிருந்த சொற்பசலுகைகளுடன் திருப்திப்பட்டிருப்பார்களே தவிர பல்லாயிரக் கணக்கான உயிர்களைப் பலி கொடுத்து 20 வருடகாலமாகப் போராடிக் கொண்டிருக்க மாட்டார்களே. அற்பசலுகைகள் ஒரு மனிதனுடைய மனத்தையோ மதத்தையோ, இலக்கையோ மாற்றிவிட முடியாது ஆகவே அற்பசலுகைகளினால் மனிதனை மதம் மாற்றுவதென்பது சாத்தியமாக முடியாத காரியமாகும்.

அடுத்து அவுஸ்திரேலிய மதபோதகரும் அவரது இரு மகன்மாரும் இந்தியாவில் தீயிட்டுக் கொலை செய்யப்பட்டது அவர்களுக்குரிய தண்டனையே என்ற கருத்தும் அக்கட்டுரையில் காணப்படுகிறது இறந்து போனமதபோதகர் மக்களை மதமாற்றம் செய்வதற்காக அவுஸ்திரேலியாவிலிருந்து இந்தியாவுக்கு வரவில்லை மனிதர்களால் அருவருக்கப்பட்ட ஒதுக்

(2 ஆம் பக்கம் பார்க்க

## சிப்பாய் பலி

[ஏறாவூர்]

வாழைச்சேனை கல்குடா வீதியில் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த இராணுவச் சிப்பாய் ஒருவர் மிதிவெடியில் சிக்கி மரணமடைந்துள்ளார். (இ-108)

### உதவி - - -

இனப்பிரச்சினையின் இன்றைய நிலைமற்றும்சமாதான முயற்சியில் பின்பற்றவுள்ள தீர்வுகள் பற்றி பிரஸ்தாபிப்பார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை மனிதஉரிமை மீறல் சம்பவங்கள் அதிகரித்துள்ளமை, மற்றும் அமைச்சர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டமை, ஆகியவற்றைக் கண்டித்து ஐக்கிய தேசியக்கட்சியினர் நாளை பரிஸில் ஆர்ப்பாட்டமொன்றை நடாத்தவுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (இ)

### கிளிகிர-5 - - - -

படவில்லை.

இப்படை நடவடிக்கையின் போது இடம்பெற்றமோதலை அடுத்து பருத்தித்துறை-யாழ் சாலை பஸ்கள் சேவையை துன்னாலை குடவத்தைப் பகுதி வரையுமே நடத்தியது.

வரணி, கொடிகாமம்பகுதிகளில் இருந்து அரச உத்தியோகத்தர்கள் வடமராட்சி செல்ல அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

ஆனால் வடமராட்சியில் இருந்து வரணிப்பகுதிக்கு அரச உத்தியோகத்தர்கள், செல்வதற்கும், தபால் பொதிகளை எடுத்துச் செல்வதற்கும் இராணுவத்தினரால் தடைவிதிக்கபபட்டிருந்தது.

தென்மராட்சிப் பகுதியில் பயங்கரக்குண்டுச் சத்தங்கள் கேட்ட வண்ணம் இருந்ததால் அப்பகுதியில் பதற்றம் நிலவி வருவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(வ-12,23,111)

### கொழும்பு - - -

ளலாம் என்ற அச்சம் காரணமாகவே பலத்த பாதுகாப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பாதுகாப்புக் கடமையில் சுமார் 2 ஆயிரம் பொலிஸார் சிவில் உடையுடனும், சீருடையுடனும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்,

பாதுகாப்புப் படையினரும், பொலிஸாரும் வீதிச்சோதனைகளிலும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். கொழும்பு புறக்கோட்டைப் பகுதியில் மேலதிக பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்று கொழும்பு பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் போதி லியனகே தெரிவித்துள்ளார். (வ)

### 16,600...

தியாகம் செய்த கேணல் முரளி மற்றும் 18 போராளிகளின் முதலாம் ஆண்டு நினைவு கூரும் வைபவத்திலேயே நிஷாம் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மேற்படி நிகழ்வு கும்பிமலை அரசியல்துறைப் பொறுப்பாளர் ஜெயா தலைமையில் இடம்பெற்றது. [இ]

### மிதி வெடியில்---

திக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பகுதியில் மிதிவெடியில் சிக்கி சிவலிங்கம் சிவாநந்தன் (வயது 10) என்ற சிறுவன் காயமடைந்துள்ளார். [ந-5]

### பல்குழல் - - -

ளில் உள்ள பரீட்சை நிலையங்களில் பரீட்சை எழுதிய மாணவர்கள் பல்குழல்பீரங்கி மற்றும் ஆட்லறிஷெல் வீச்சுச் சத்தங்களினால் குழம்பிப் போயிருந்தார்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் உள்ள நோயாளர்களும் பெரும் சிரமத்திற்குள்ளானார்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (வ-12)

# ஈச்சமோட்டையில் ஹெலி தாக்குதல்
## வீடொன்று பலத்த சேதம்

(யாழ்ப்பாணம்)

எம். ஐ. 24 ரக யுத்த ஹெலிகளின் தாக்குதலுக்கு இலக்கான வீடு ஒன்றுபலத்த சேதத்திற்குள்ளானதாகவும், அந்த வீட்டில் எவரும் குடியிருக்காமையினால் உயிரிழப்பு தவிர்க்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று அதிகாலை 5-30 மணிக்கு குடாநாட்டு வான்பரப்பில் வட்டமிட்ட இரு ஹெலிகொப்டர்கள் சரமாரியாக 'றொக்கட்' மற்றும் கலிபர் தாக்குதல்களை மேற்கொண்டன,

இதனால் யாழ்ப்பாணம் ஈச்சமோட்டை விதானையார் லேனில்உள்ள மாணிக்கவாசகர் என்பவரது வீடு பலத்த சேதத்துக்குள்ளானதாகத் தெரிவிக்கப்படுகிறது. ஏற்கனவே அப்பகுதியில்இடம்பெற்ற படைநடவடிக்கைளினால் அப்பகுதியில் உள்ள மக்கள் இடம்பெயர்ந்து பிற இடங்களில் குடியமர்ந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (வ-110-59)

### மும்முனை - - -

இந்த இராணுவ நடவடிக்கையின்போது விடுதலைப் புலிகளின் கடுமையானஎதிர்த் தாக்குதலையும் எதிர்நோக்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இராணுவத்தினருக்குஉதவியாக பீரங்கிப்படைப்பிரிவினரும், கவச வாகனப்படையினரும்விமானப்படையினரும் தாக்குதல்களை மேற்கொண்ட வண்ணமிருந்தனர்.

பல்குழல் பீரங்கிகள் பொருத்தப்பட்டிருந்த தளங்களில்இருந்து பல்குழல் பீரங்கிகள் சரமாரியாக ஏவப்பட்டதுடன், அகோர ஆட்லறி எறிகணைத் தாக் குதல்களும் நடத்தப்பட்டன.

எம் ஐ, 24 ரக யுத்தஹெலிகள் இரண்டு தீப்பிளம்பைக் கக்கியவாறு றொக்கட் மற்றும் கலிபர் தாக்குதல்களை சரமாரியாக மேற்கொண்டது

இத்தாக்குதல்களின் போது விடுதலைப்புலிகளின் தரப்பில் ஏற்பட்டசேதவிபரம் எதனையும் விடுதலைப்புலிகள் உடனடியாக அறிவிக்கவில்லை.

பல்குழல் பீரங்கித் தாக்குதல்களினால் கோப்பாய், இருபாலை உள்ளிட்ட பல பகுதிகள் அதிர்ந்த வண்ணமிருந்தன.

இக் குண்டுத் தாக்குதல்கள் நண்பகல் சற்று தணிந்திருந்தபோதும், பின்னர் மாலை நேரம் இடை இடையே எறிகணைத் தாக்குதல்கள்நடைபெற்ற வண்ணம் இருந்தது.

இம் மோதல் நடவடிக்கையின்போது ஆயிரத்துக்கும் அதிகமான பல்குழல் பீரங்கிக் குண்டுகள் தாக்குதலுக்கு பயன்படுத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ம)

### இலங்கையில்---

வும் தெரியவருகிறது

இந்துசமுத்திரப் பிரசித்தம் தமிழ்நாடு ஆகிய இடங்களிலும் இதன் பாதிப்பு காணப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை 1999 ஆம் ஆண்டு டிசம்பர் 15ஆம் திகதி இப்படியானதொரு நிலநடுக்கம்கொழும்பில் உணரப்பட்டிருந்ததும் குறிப்பிடத்தக்கது. (ந)

முற்றத்தில் வீழ்ந்து வெடித்ததில் இளம் பெண் ஒருவர் பலியானார். மற்றும் இரு

### வடமராட்சி - - -

பெற்றது.

இதேவேளை எதேச்சையாக அப்பகுதிக்கு வந்த சிரேஷ்ட இராணுவ அதிகாரி சம்பந்தப்பட்டவர்களுடன் மேற்படி விடயம் தொடர்பாக கேட்டறிந்ததுடன் வழமை போன்று தொழிலில் ஈடுபடுமாறும் தெரிவித்தார். இதனையடுத்து பகிஷ்கரிப்பு போராட்டம் கைவிடப்பட்டது. (இ-ச-43)

## கூட்டம்

யாழ். மாநகர சபையின் மாதாந்தக் கூட்டம் நாளை திங்கட்கிழமை காலை நடைபெறவுள்ளது.

மேயர் ரவிராஜ் தலைமையில் நடைபெறவிருக்கும் இக் கூட்டத்தில் 2001ம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்டமும் சமர்ப்பிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

### விடுதலை-----

டிருக்கும் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவந்து இயல்பு நிலையைத் தோற்றுவிப்பது குறித்து பேச்சுவார்த்தையின் போது ஆராயப்படும்.

அரசாங்கம் சமாதான முயற்சிகள் தொடர்பான நிலைப்பாட்டைத் தெரிவித்துள்ள போதும், இது குறித்துத் தெளிவான இறுதிநிலைப்பாட்டை விடுதலைப்புலிகள் இன்னமும் தெரிவிக்கவில்லை என்றும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையிலான சமாதானப் பேச்சுவார்த்தைகள் இம்மாத இறுதிக்குள் ஆரம்பிக்கப்படுமா என்ற செய்தியாளர் ஒருவரின் கேள்விக்குப் பதிலளித்த அமைச்சர் கதிர்காமர் உடனடிப் பேச்சுவார்த்தை நடைமுறைச் சாத்தியமற்றது. ஜனாதிபதி சந்திரிகா தற்பொழுது ஐரோப்பிய நாடுகளுக்கு விஜயம் மேற்கொண்டுள்ளார்.

இந்நிலையில் அவர் நாடு திரும்பும் காலஎல்லை இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை இதனால் இப்பேச்சுவார்த்தை இம் மாத இறுதிப் பகுதியில் நடைபெறுவது சாத்தியமில்லை என்று அமைச்சர் கதிர்காமர் தெரிவித்துள்ளார் (க)


## அதிஷ்டலாப சீட்டிழுப்பு

கொக்குவில் இந்துக் கல்லூரியின் இன்ரறக்ட் கழகத்தினால் விற்கப்பட்ட அதிஷ்டலாபச் சீட்டானது நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை 15-12-2000 மாலை 4-00 மணியளவில் சீட்டிழுக்கப்பட்டுள்ளது என்பதனை அறியத்தருகின்றோம்.

**பரிசு பெற்றோர் விபரம் வருமாறு:**

| | | |
|---|---|---|
| முதலாவது | பரிசு இல. | 5267 |
| இரண்டாவது | ,, | 3237 |
| மூன்றாவது | ,, | 4743 |

**ஆறுதல் பரிசுகள்:**

1. 6181 2. 3173 3. 7101
4. 2814 5. 4692

இன்ரறக்ட் கழகம்
கொக்குவில் இந்துக்கல்லூரி

(கி-1119)

## சாவகச்சேரி வணிகர்கள் கவனத்திற்கு

எமது மன்றிடம் ஒப்படைக்கப்பட்ட நஷ்ட இழப்பீட்டின் படிவங்கள் அங்கத்துவ இலக்கம் 1-50 என்ற அடிப்படையில் மீளாய்வு செய்யும பணி [குழுவுடன்] நாளை 18-12-2000 திகதி தொடக்கம் 26-12-2000 திகதி வரை காலை 8-30 தொடக்கம் மாலை 5-00 மணி வரை மன்ற பணியகத்தில் நடைபெறும்.

வணிக அங்கத்துவராகிய விண்ணப்பதாரி மட்டும் சமுகம் தரவும்.

**குறிப்பு:**

தெரிவு செய்யப்பட்ட மீளாய்வுக் குழுவினரும் சமுகம் தரவும்.

செயலாளர்,
சாவகச்சேரி கைத்தொழில்
வணிகர் கழகம்

கொடிகாமம் வீதி,
நெல்லியடி.

(கி-1118)

## நாகம்ஸ்

(சுன்னாகம்)
விஜய், ஜோதிகா
நடித்த
குஷி
தினசரி 11.00--2.30
(புதிய நேரம்)
(கி-813

## ஸ்ரீசெல்வா

(யாழ்ப்பாணம்)
கமல் - ஜோதிகா
தேவயாணி
நடித்த
தெனாலி
(வெட்டுப்படாத
நேரடி CD)
10.30

பெண்ணின் பெருமை
இன்று பட்டும்
2-00 மணிக்கு
[கி-688]


## மரண அறிவித்தல்

### சகோதரி குளோறி சண்முகம்

'நல்ல போராட்டத்தைப் போராடினேன்,
ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக்
காத்துக்கொண்டேன்,
II தீமோத்தேயு 4 . 7

இலங்கை பெந்தேகொஸ்தே சபையைச் சேர்ந்த சகோதரி குளோறி சண்முகம் அவர்கள் சனிக்கிழமை (16-12-2000) அன்று பி.ப. 2-45 மணியளவில்மகிமைக்குள் பிரவேசித்துவிட்டார். அன்னாரின் அடக்க ஆராதனை 111.கண்டி வீதியில் இருக்கும் இலங்கை பெந்தெகொஸ்தே சபைச்சாலையில், திங்கட்கிழமை (18-12-2000) அன்று பி.ப. 2-30 மணிக்கு இடம் பெறும். அதன் பின்பு கொட்டடி சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்பட்டு அங்கு நல்லடக்க ஆராதனை இடம்பெறுமென்பதை யாவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:-
இலங்கை பெந்தேகொஸ்தே சபை
இல. 111, கண்டி வீதி,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
T. P. 021 2339

(2021)

## பிரிவுத் துயர் பகிர்வு

### விஜயராணி பஞ்சரத்தினம்

தலையாழியைப் பிறப்பிடமாகவும் வத்தளையை வசிப்பிடமாகவும் கொண்டவிஜயராணிபஞ்சரத்தினம் 15-12-2000 அன்று காலமானார்.

இறுதிக்கிரியைகள்நேற்றுநடைபெற்றன.

தகவல்:- சுப்பிரமணியம் இரகுநாதன். (சகோதரன்)

### திருமதி எல். எஸ். ஏ. இராசா

(ஓய்வு பெற்ற ஆசிரியை)

உடுப்பிட்டியைச் சேர்ந்த திருமதி இராசா 11-12-2000 அன்று காலமானார்.

இறுதிக் கிரியைகள் இன்று நடைபெறும்.

தகவல்:- வே. இராசா (கணவன்)

### துரைச்சாமி சச்சிதானந்தன்

சுதுமலை தெற்கைச் சேர்ந்த துரைச்சாமி சச்சிதானந்தன் 14-12:2000 அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று கொழும்பில் நடைபெறும்.

தகவல்;- து. லோகநாதன் (சகோதரன்)

இப்பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தினரால் இல. 15, வெள்ளாந்தெரு. யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2000 ஆம்ஆண்டு டிசம்பர் மாதம்17ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.